689

கர்ண - அர்ஜுன

நாடகம்

THE REGISTRAR OF BOOKS
21 DEC 1939
MADRAS

2919

சென்னை ஸெக்ரிடேரியட் சங்கத்தார்

கர்ண-அர்ஜுன

(KARNA-ARJUNA)

894.8112

WITH A FOREWORD

By the Rt. Hon'ble
V. S. SRINIVASA SASTRIAR, P.C., C. H.

சென்னை ஸெக்ரிடேரியட் சங்கத்தார்
The Madras Secretariat Party

ல அணா 8

All Rights Reserved

SRI RAMAKRISHNA PRINTING WORKS,
Woods Road, Mount Road, Madras.

FOREWORD

No theme in our ancient story thrills me more than the life of Karna. The rivalry between him and Arjuna, which only death could end, is full of drama which moves our inmost being. The character of Karna appeals to us as no other character does. Its lights and shadows are so blended that we feel convinced of its reality and fidelity to human nature without a shadow of doubt. More exalted and flawless heroes there are; but they seem beyond our ken, denizens of another planet. Karna is our own. His ambition is applauded the more for the duplicities to which it drives him. His bounty staggers by its utter effacement of self. His loyalty, which survives the revelation of the closest blood-tie with the enemy, passes our belief nearly, but not quite. I confess Arjuna, whom the Lord favours, fails to grip me in the way his victim does. In adversity as well as in good fortune, in his faults no less than in his merits, Karna is grand, with a grandeur that keeps him still one with us, and not with that other grandeur that translates its possessor away from humanity to the sphere of the gods.

It was true dramatic genius that chose Karna for hero. The Bengali poet Aparesh Mookerji was inspired when he hit on this theme; and the Madras Secretariat Party, in adapting and producing this play, have conferred a blessing on Tamil audiences. I had the good fortune to see it performed in Madras; the exquisite literary satisfaction that it gave is among my grateful memories.

ANNAMALAINAGAR
4th April, 1939.

V. S. SRINIVASA SASTRI

முன்னுரை

சென்ற இருபத்திரண்டு வருடங்களாக, சென்னை ஸ்ரீ ராம கிருஷ்ண ஸ்டுடெண்ட்ஸ் ஹோம் என்னும் மாணவரில்லத்தின் உதவிக்காக, சென்னை ஸெக்ரிடேரியட் சங்கத்தார் நாடகத் துறையைக் கையாண்டு வருவது பலரும் அறிந்த விஷயமே. இச்சங்கத்தார் புத்ரோத்தம ராமன், மீராபாய், ஹரிச்சந்திரன், கபீர்தாஸ், லீலாசுகர், (பில்வமங்கள்) ஹநுமத்ஸஞ்சீவி, கர்ண - அர்ஜுன, ரூப்-ஸநாதன் என்னும் நாடகங்களை மொழிபெயர்த்தும், புதிதாக இயற்றியும் நடித்துவருகின்றனர். ஆயினும், இதுவரை இவற்றில் ஒன்றையும் அச்சிட்டு வெளியிடவில்லை. சில வருடங்களாக அநேக ஸினிமா கம்பெனியாரும் அமெச்சூர் ஸபைகளும் இந்நாடகங்களை நடிக்க அநுமதி கேட்டும், இவைகளை அச்சிடும்படி வற்புறுத்தியும் வருவதால், இப்போது இச்சங்கத்தார் பலவிடங்களிலும் நடித்து வரும் "கர்ண-அர்ஜுன" என்னும் நாடகத்தை முதலாவதாக அச்சிட்டு வெளியிடலாயினர்.

கர்ண-அர்ஜுன என்னும் இந்நாடகம், பெயர்பெற்ற வங்காள நாடகாசிரியரான, ஸ்ரீ அபரேஷ் முகர்ஜி என்பவரால் வங்காள பாஷையில் இயற்றப்பட்டது. கல்கத்தா, பம்பாய் நகரங்களில் சேர்ந்தாற் போல 200, 100 தினங்கள் நடிக்கப் பெற்ற சிறப்புடையது. இதை இச்சங்கத்தார் நடிப்பதற்கு மூலகாரணமானவர் கனம் ரைட்-ஆனரபிள் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்கள் பி. ஸி. அன்னார் இச்சிறந்த நாடகத்தை எடுத்து நடிக்கும்படி இச்சங்கத்தாரிடம் குறிப்பிக்க, இவர்கள், காலந் தாழ்த்தாது ஆசிரியரான ஸ்ரீமான் அபரேஷ் முகர்ஜியின் அநுமதி பெற்று இதைத் தமிழில் மொழிபெயர்த்து இயற்றி, 1934-ம் ஆண்டில் முதன் முறையாக நடித்தனர். அதன்பின் இதுவரை இந்நாடகம் இருபது முறை இவர்களால் இவ்விராஜதானியின் பலவிடங்களிலும் நடிக்கப்பட்டுள்ளது.

கொடையிற் சிறந்த கர்ணனது வாழ்க்கையில் அவனுடைய குருகுல வாஸந் தொடங்கி, கடைசியாக அவன் யுத்தகளத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருளைப் பெற்றுப் புகழுடன் பெய்தியது வரையில் உள்ள முக்கிய அம்சங்கள் இந்நாடகத்தில் நன்கு அமைக்

கப்பட்டுள்ளன. வங்காளத்தினின்றும் மொழிபெயர்க்கையில் ஸ்ரீ வியாசபாரதம், வில்லி பாரதம் முதலிய நூல்களையும் ஆராய்ந்து அவற்றிலிருந்து இக்கதைக்கேற்ற சிறந்த பாகங்களும் ஆங்காங்கு எடுத்து இயைக்கப்பெற்றுள்ளன.

இந்நூலை வங்காளத்தினின்றும் மொழிபெயர்க்க உதவியவர் ஸ்வாமி அஜயானந்தர் ஆவர். இதை இப்போது பதிப்பித்திருக்கும் முறையில் வெளியிடுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தவர் ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார். இவர் இச்சங்கத்தின் பழைய அங்கத்தினர். இந்நாடகமன்றி, வேறு சில நாடகங்களை இயற்றுவதிலும் இவர் மிக்க உதவி செய்துள்ளார். இவருடைய உதவி என்றும் மறத்தற்பாலதன்று.

இந்நாடகத்தை நடிக்க விரும்புவோர், சென்னை ஸெக்ரிடேரியட் சங்கத்தாரின் அநுமதியை முன்னதாகப் பெற்று, அதற்குரிய உரிமைக் கட்டணத்தையும் (Royalty) செலுத்தியே பிறகு நடித்தல் வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண
மாணவர் இல்லம்.
மயிலாப்பூர், சென்னை.
4 ஏப்ரல் '39.

இங்ஙனம்,
சென்னை ஸெக்ரிடேரியட்
சங்கத்தார்.

நாடக பாத்திரங்கள்

—:o:—

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

தேவேந்திரன் (பிராம்மண வேஷம்)

கர்ணன்

பஞ்சபாண்டவர்கள்—யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன்,
நகுலன், ஸஹதேவன்.

திருதராஷ்டிரர்

விதுரர்

துரியோதனன், துச்சாஸனன், விகர்ணன்

பீஷ்மாசாரியர், துரோணாசாரியர், கிருபாசாரியர், ஸஞ்சயர்.

பரசுராமர்

சகுனி

சல்லியன் (மத்ஸ்ய ராஜன்)

த்ருபதன் (பாஞ்சால ராஜன்)

திருஷ்டத்யும்னன்

விசித்ரஸேனன் (பத்மாவதியின் பிதா)

அதிரதன் (ஸாரதி)

பிரதிகாமி (ஸேவகன்)

குந்திதேவி

த்ரௌபதி

பத்மாவதி (கர்ணன் மனைவி)

ஸரஸா (பத்மாவதியின் தோழி)

—

கர்ண-அர்ஜுன

அங்கம் 1—களம் 1.

மகேந்திரகிரி - பரசுராமன் ஆச்ரமம்.

[கர்ணன் துடை மீது சிரம் வைத்துத் தூங்கியவண்ணம் பரசுராமன் காணப்படுதல்.]

கர்ணன். (தனக்குள்)

சுலோகம் — மோகனம்

யன்மண்டலம் தேவகணை : ஸுபூஜிதம்
விப்ரை : ஸ்துதம், பாவன முக்தி கோவிதம்
தம் தேவ தேவம், ப்ரணமாமி ஸூர்யம்
புனதுமாம், தத்ஸவிதுர்வரேண்யம்

அயர்ந்து நித்திரை செய்கிறார். துரோணாசாரியார் என்னைத் தன் சிஷ்யனாகக் கொள்ள மறுத்ததும் என் நன்மைக்கேபோலும்! இன்று இம்மகானால் என் பேரவா நிறைவேறியது என் புண்ணிய பலனே தான்! ஹா! என்ன இது! .... துடையை ஏதோ துளைக்கிறது! ரத்தம் பெருகி ஓடுகிறதே! .... ஈசா! உபாதி தாங்க முடியாதது போல அதிகரிக்கிறதே! .... துடையைச் சற்றும் அசைப்பேனாகில் என் ஆசிரியருக்கு நித்ராபங்கமல்லவா உண்டாகும்! எதுவரினும் பொறுமையுடன் பொறுத்துக் கொள்வதே வீரனுக்கு அடையாளம். ஆஹா! உதிர வெள்ளம் அவர் முகத்திலும் பெருக ஆரம்பிக்கிறதே!

பரசுராமன். (திடுக்கிட்டு முகத்தைத் துடைத்த வண்ணமாக எழுந்து கையைப்பார்த்து) சிஷ்யா! என்ன இது? என் முகத்தில் ரத்தப் பெருக்கு? ஹா! ....ஹா! நான் தலைவைத்திருந்த உன் துடையில் ஏன் உதிரம் ஊற்றிலிருந்து கிளம்பி வழிவது போல் ஓடுகின்றது? உன்னை என்ன கடித்து விட்டது? .... என்னை ஏன் எழுப்பவில்லை? நீ இந்த அளவற்ற வேதனையை எவ்வாறு சகித்திருந்தாய்?

க. தமது நித்திரைக்குப் பங்கம் இழைக்கக் கூடாதென்றே.

ப. (ஆச்சரியத்துடன்) என்ன! மூவேழு முறைகளாக நான் முடிவுறுத்திய சுத்த க்ஷத்திரியர்களிடத்தும் கண்டதில்லை உன்னிடம் இன்று நான் கண்டது போன்ற மனோ வன்மை. அப்பா! புருஷஸிம்ஹமாம் உன்னைத் தனயனாகப் பெற்ற பாக்யங் கொண்ட பூசுரோத்தமர் யாவர்? என் நயனங்கள் அப்புமானைக் கண்டு களிக்கக் கோருகின்றன. அவர் எங்கிருக்கிறார்?

க. (கலக்கம் மிக்குக் கண்ணீர் சொரிய பாசுராமன் சரணங்களில் வீழ்கிறான்.)

ப. சிஷ்யா, எழுந்திரு. ஏனப்பா திடீரென்று கண்ணீர் உதிர்த்து வருந்துகிறாய்?

க. (எழுந்து, அவர் முன் முழந்தாளிட்ட வண்ணம் சிரமேல் குவித்த கரங்களுடன் கண்ணீர் பெருக, மௌனம்) —.

ப. ஹா! ஹா! மகாதீரனும் உன் மனத்தையுங் கலக்கி, சுத்த வீரனும் உன் கண்களிலும் நீர் பெருக்கத் தக்க வார்த்தைகளைக் கூறி, உனக்கு வருத்தத்தை உண்டாக்கி விட்டேனே! .... அப்பா, உன் அருமைப் பிதா விண்ணுலகேகினரா? இல்லையேல், அவர் வரலாற்றைக் கேட்டதும் நீ வருந்துவானேன்?

க. பிரபோ! ....நான் சண்டாளன்! .... துரோகி ....மகா அபராதி!

ப. எதற்காக இவ்வாறு உன்னையே நீ நிந்தித்துக் கொள்ளுகிறாய்? நீ செய்ததாகக் கூறும் அபராதந்தான் என்ன?

க. (எழுந்து) ஆசார்ய சிரேஷ்ட! தங்களை நாடியடையு முன்னர் துரோணரை ஆச்ரயித்தேன் தனுர்வித்யா போதனைக்காக. அவர் என்னைப் புறக்கணித்து, அகற்றிச் சிஷ்யனாக்கிக் கொள்ள மறுத்தார். அக்காரணத்தினால் மனமுடைந்தவனானேன். தங்களை அடைந்து எப்படியாவது தனுர்வித்யா சிரேஷ்டனாக வேண்டுமென்ற பேரவாக் கொண்டேன். சில உண்மைகளைத் தங்களிடம் வெளிப்படுத்தாது உபதேசம் பெறத் துணிந்து விட்டேன். ப்ரபோ! மகத்தான அபராதியாயினேன். எனினும் என் பிழையைப் பொருட் படுத்தாது இதுகாறும் தங்கள் சிஷ்ய சிரேஷ்டனாக பாவித்து வந்த அடியேனை இனியும் கருணையுடன் ஆட்கொண்டு அருள் புரிய வேண்டும்.

ப. நீ செய்த பிழை இன்னதென்று இன்னமுங் கூற வில்லையே? துரோணர் உனக்கு உபதேசஞ் செய்ய மறுத்த காரணம் யாது?

க. தவசிரேஷ்ட! நான் சண்டாளன்! பரம சண்டாளன்! பிறப்பாலும் சண்டாளன்! செய்கையாலும் சண்டாளனுனேன். மன்னிப்பீரா?

ப. என்ன? உன் சொற்கள் என் மனச் சாந்தியைப் போக்குகின்றன. நீ செய்த பிழை தான் யாது? கூறுவாய் சடுதியில்.

க. பிரபோ! அதிரதனென்னுமோர் ஸ்துதி பாடகனுல் கங்கையிற் கண்டெடுத்து வளர்க்கப் பட்டு வரும் ஸூத புத்ரன் நான்!

ப. (கோபமிக்கு) ஆஹா! அடே நீசா! த்ரோகி! நீ ஓர் பிராமணனென்று என்னை நம்பச்செய்த காரணங் கொண்டன்றே, பரமரஹஸ்யமான ப்ரம்ஹாஸ்திரப்பிரயோகத்தையும் இன்று உனக்குக் கற்பித்து முடித்தேன். அடே பொய்யனே! துராசாரா! என் பிரதிக்ஞைக்குப் பங்கமிழைத்தா, உன் பிரதிக்ஞையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கருதினுய்? ஆஹா! என்ன தவறுசெய்தேன்!

க. குருவர்ய! குருவர்ய! தங்கள் போன்பிற்குப் பாத்திரனுயிருந்த பெரும் பாக்கியம் பெற்ற அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்! பொறுத்தருள வேண்டும்.

(அவர் பாதங்களில் வீழ்ந்து சரணங்களைப் பிடித்துக் கொள்ளுகிறுன்)

ப. (கோபாவேசனுகிக் கர்ணன் பிடியை உதறித் தள்ளி) பொறுத்தருள்வதா? க்ஷணமும் பொறுக்க முடியாது! குருத்துரோகஞ் செய்யத் துணிந்த நீ எத்தகைய துரோகந் தான் செய்யத் துணியமாட்டாய்? இனி க்ஷணமும் உன்னைக் காண்பதுவும் பாபமாகும். உன் துர்எண்ணங்களுக்கும் துஷ்கிருத்யங்களுக்கும் ஏற்ற சாபத்தைப் பிடி இந்த க்ஷணமே! எவனெருவனை நீ ஜன்ம வைரியாகக் கருதி, யுத்த முனையில் முறியடித்துக் கொல்ல எண்ணுகின்றனையோ, அவனை, யுத்த முனையில் எதிர்த்துக் கொல்லவிருக்குந் தருவாயில், வஞ்சனையினுல் கற்ற இக்

கலையனைத்தும் உனக்குப் பயன் படாது போகுமாக. செல்.—இனிக்ஷணமும் என் முகத்தில் படாது செல்.

(விரைந்து செல்கிருர்)

க. (திகைத்து ஸ்தம்பித்து நிற்கிருன்)

மால் கௌளஸ்—ரூபகம்

பாழே ஆன எண்ணமெல்லாம் பயின்ற பலகலை அவமே பா

கீழ்மை சேரும் பொய்கலந்து கேடடைந்தேன் பாவினானே பா

பார்த்தன்வின்மை கண்டுவீணே பதறி நின்றேனே
பழியில் துரோணர் சொல்லை மீறிப் பழிக்காளானேனே
கீர்த்திமேவ எண்ணிமிகக் கெடுதியுற்றேனே
கிளறும் வேற்றியின்றி நாயின் கீழோனுனேனே பா

(திரை விழுகிறது.)

அங்கம் 1 - களம் 2

அரண்மனையில் ஓர் பூஜை அறை

[பத்மாவதி பூஜை செய்த வண்ணம்]

யமுனு கல்யாணி

ஸ்ரீ சிவ புரஹர கருண பாஹி

கமலதளலோசன பதிதபாப விமோசன
காமாந்தக நமோ பக்தாபிமான (ஸ்ரீசிவ)

சசிஸகலா தாரண துஹினசைலவிதோஷண
கங்காதர நமோ கௌரீப்ரியாய (ஸ்ரீசிவ)

பத்மாவதி. மஹேச்வரா! என் மனோரதம் என்று பூர்த்தியாகும்? உம்முடைய கிருபையினுல் என்று நான் என் மனதுக்குகந்த மணாளனைப் பெறுவேன்? என் ஜீவியத்தையும்

என் யௌவனத்தையும் யார் பாதங்களில் நான் அர்ப்பணம் செய்யப்போகின்றேனோ? மஹேச்வரா !!

(முழந்தாளிட்டுக் கரங்குவித்து ஸ்தோத்திரஞ்செய்கிருள்)

சுலோகம்—ஆனந்த பைரவி

ஹேபார்வதீஹிருதயவல்லப சந்த்ரமௌளே
பூதாதிப ப்ரியகளத்ர விபோ மஹேச
ஹேவாமதேவ பவ ருத்ர பினகபாணே
கங்காதர ப்ரமதநாத க்ருபாம் விதேஹி

[பத்மாவதி மூர்ச்சித்துச் சாய்கிருள்]

காட்சி மாற்றம்.

[பார்வதி ஸமேதராகப் பரமசிவன் தோற்றம். ஈசன் ஆசீர்வதிக்க காட்சி மறைகிறது]

(தோழி ஸரஸா பிரவேசம்)

ஸரஸா. (திடுக்கிட்டு) தேவி ஏன் மூர்ச்சித்திருக்கிருள்? (நெருங்கி மூர்ச்சை தெளிவிக்க, பத்மாவதி மெல்லக் கண்விழித்து எழுந்திருக்கிருள்)

ப. (மெல்லிய குரலில்) ஹா தேவா! எங்கே அவர்? .... ஸரஸா, எங்கே என் தேவனும் தேவியும்?

ஸ. என்ன அம்மா இது? தேவன் யார்? தேவி யார்? சித்தப் பிரமையா! பூஜை முடிந்து விட்டதா இல்லையா? மகாராஜா உம்மைத் தேடிக்கொண்டிருக்கிருர்.

ப. எதற்காக?

ஸ. எதற்காகவா? ஸ்வயம்வரத்திற்கு மங்களநாள் ஒன்று நிச்சயிக்கத் தான். புரோஹிதரும் வந்திருக்கிருர்.

ப. ஸரஸா, அந்த ஸ்வயம்வரம்-(பெரு மூச்சு விட்டு)- எனக்குத் தேவையே இல்லை.

ஸ. என்னம்மா சொல்லுகிறீர்? ஸ்வயம்வரம் தேவையே இல்லையா?

ப. ஆமாம். சிவ பூஜையின் பலன் இன்று கைமேல் கிடைக்கப் பெற்றேன். இனி எதற்கு ஸ்வயம்வரம்? தேவாதி தேவன் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு அடியேன் என் கணவனுகப் போகும் பரம புருஷனைத் தேடிச்செல்கிறேன்,

ஸ. புருஷனையா! .... தேடிச்செல்வதா! .... என்ன விபரீதம் இது? நீரோ வயது வந்த பெண். உம்மைத்தனிமையில் விட உமது பெற்றோர் எவ்வாறு சம்மதிப்பார்கள்? பிரயாணத்தின் கஷ்டத்தைத்தான் நீங்கள் எவ்வாறு சகிப்பீர்கள்?

ப. கஷ்டத்தைப்பற்றி ஏன் சிந்தனை? ஸர்வலோகமாதாவாகிய உமாதேவியும் மஹேச்வரனை யடைய மலைகளில் வசித்துப் பஞ்சாக்னி மத்தியில் தவங்கள் செய்து உபவாஸாதிகளிருந்து கஷ்டப்பட்டதை நீ கேள்விப்பட்டதில்லையா?

ஸ. தேவி! உமாதேவியைப்பற்றி ஏன் பேசுகிறீர்? அவள் மகாதேவி. அவளுக்கு உவமானம் ஏது?

ப. வாஸ்தவம். அம்மா, அவர்களுக்குச் சமானம் இருக்க முடியாது தான். ஆனால் நாமும் அவர்கள் பிறந்த நாட்டில் அவர்கள் பிறந்த மரபிலேயே வந்தவர்கள் அல்லவா? அவர்கள் உதாரணத்தை நாம் ஏன் கடைப்பிடிக்கக் கூடாது? மஹேச்வரன் துணையும் இருக்கும் போது நாம் ஏன் அம்மா கவலைப்பட வேண்டும்?

ஸ. ஆயின் தந்தையின் அனுமதி பெற வேண்டியதே பாக்கியோ? அவர் அனுமதி கொடுப்பாரோ? தாயார் சம்மதிப்பாரோ?

ப. அவர்கள் சம்மதியார்கள் தான். அவர்கள் அனுமதி பெற்றுப் புறப்படுவதென்பது முடியாத காரியம். ஈசன் ஆக்ஞையை முன்னிட்டுப் புறப்படும் எனக்கு வேறெவர் அனுமதி வேண்டும்?

ஸ. உம்மைக்காணுமல் அவர்கள் பரிதவிப்பார்களே!

ப. சிறிது காலந்தானே. பிறகு, ஈசனருளால் நான் திரும்பவும் அவர்களையடைந்து ஆனந்திக்கச் செய்வேன்! இன்றிரவே, எவருமறியாது புறப்படுவேன். நான் திரும்புமளவும் எவர்க்கும் கூருதே என் காரியத்தை. நீயும் ஏதுமறியாதவள் போல் இருப்பாய்.

ஸ. அம்மணி, அது முடியாது. நான் தங்களை விட்டு க்ஷணமும் பிரிந்து தனித்திரேன். அதிலும், தாங்கள் தனிமையாகப் போகும்பொழுது நான் மட்டும் இங்கே இருக்க சம்மதிப்பேன் என்று எண்ணினீர்கள்? நானும் தங்களுடன் புறப்பட்டு விட்டேன்,

ப. ஸரஸா, ஆனல் நீயும் வரத்தான் போகிருயோ?

ஸ. வரத்தான் போகிறேன்.

ப. எவரிடமும் சொல்லிக் கொள்ளாமலா?

ஸ. ஆம். தாங்களே அப்படிச் செய்யப் போகையில் நான் மட்டும் தங்களைவிடச் சிறந்தவளா?

ப. ஸரஸா, நீயே என் உயிர்ப் பாங்கி! வா புறப்படுவோம்

ஸ. எங்கு, எதற்கு? இன்னமும் கூறவில்லையே.

ப. மறந்தேன். சற்று முன், மகாதேவனும் பார்வதியும் என் முன் தோன்றி, 'பத்மாவதி! உன் பூஜையைக்கண்டு மெச்சினேம். மகாசிரேஷ்டனன வீரனையே நீ கணவனகப்பெறுவாய். கவச குண்டலங்களுடன் பிறந்தவன் அவன். அவன் நயனங்களிலே ரவியின் ஜோதி விளங்கும். அவன் மேனி பத்தரை மாற்றுத்தங்கமெனப் பிரகாசிக்கும். நீ அவனைச் சந்திக்கும் காலம் நெருங்குகிறது. நீ அவனைத் தேட உடனே புறப்படு' என்றுகூறி மறைந்தார். இனிப் புறப்படுவோம் வா.

ஸ. எங்குச் செல்வது?

ச. எங்கா? ஈசன் அழைத்துச் செல்லும் இடத்திற்கு.

ஸ. பைத்தியம் பிடித்து விட்டதா. என்ன உமக்கு? ஈசன் உமக்கு வழிகாட்ட வருகிறேனென்று கூறினரா?

ப. அடி பைத்தியமே! நான் உண்மையான பக்தியுடன் அவரைப் பூஜித்து வந்தது வாஸ்தவமானல், அவர் என் முன் தோன்றிக் கூறிய வார்த்தைகள் ஸத்ய வாக்கானல், அவர் ஆக்ஞையை மேற்கொண்டு புறப்படும் நமக்கு அவர் எப்படியாயினும் வழிகாட்டாது போவாரா என்ன? புறப்படுவோம் வா ஈசன் ஆக்ஞைப்படி.

ஸ. ஸரி. உம் இஷ்டப்படியே புறப்படுவோம். அந்த ஈசன் தான் நம்மைக் காப்பாற்றி உமது கோரிக்கையையும் ஈடேற்றி வைக்கவேண்டும்.

ப. உண்மை. ....கடவுளை நம்பினேர் கை விடப்படார்.

ஸிந்து பைரவி—ஆதி

எம்மையாள வந்த சிவனே
என்ன வென்பேனுந்தனருளே
பால சந்த்ர சூட சம்போ
ஹர பாஹி கங்காதர ஹே

(ஈச்வரனைத் துதித்து இருவரும் செல்கின்றனர்)

அங்கம் 1 - களம் 3.

ஹஸ்தினபுரி — ராஜ வீதி

[துரோணசாரியரும் கிருபாசாரியரும் பேசிய வண்ணம் பிரவேசம்.]

கிருபா. நானும் பார்க்கிறேன், பாண்டவர்களிடம் துரியோதனனுக்குள்ள பொறாமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே தான் வருகிறது.

துரோண. பிறவிக்குணத்தை எவ்வாறு மாற்ற முடியும்?

கி. நமது துரதிர்ஷ்டத்தைப்பாருமே! இந்தக் கௌரவர்களுக்கு ஆசிரியர்களாக அமையவேண்டி வந்ததே.

து. சோற்றுக்கடன்! கிருபரே! சோற்றுக்கடன் தீர்க்க வேண்டுமல்லவா? தகப்பன் இட்ட அன்னத்துக்கும் காட்டிய மரியாதைக்கும் க்ருதக்ஞை காட்டி, ஸ்வய மரியாதையையும் கவனியாது, அவன் பிள்ளையிடத்து அடங்கி யொடுங்கி நடக்கவேண்டியதாகிறது.

கி. இதற்குப் பிராயச்சித்தம் ஒன்று மில்லையா?

து. உண்ட வீட்டிற்கு இரண்டகம் எண்ணுதிருத்தல் தான் பிராயச்சித்தம்.

கி. அவ்வாறிருப்பது சித்ர வதைக்குள்ளாவதை விடக்கொடியதாயிருக்கிறதே!

து. உண்மையே. வேறுவழி?

விருத்தம்—தன்யாசி

எத்தனை தான் சொன்னாலும் இயல்பிலாத் துரியனென்றும்
உத்தமன் பல்குனன்பால் ஓரம் நாம் உடையோமென்று
சித்தமே திரிந்து வேருய்ச் செப்புவன் பலவும் நம்மை
இத்தனைக் கேது செய்வோம் செஞ்சோற்றுக் கடனிதன்றே!

கி. சாஸ்திர நீதியும் அது தானே?

து. கலியுகம் கிட்டுகிற தல்லவா? ஸாதுக்களது அடிமைத் தனமும் ஆரம்ப மாகிறது. தத்தம் பாக்கியத்திற்குப் பொருந்திய படியே யன்றோ மனிதர்கள் கர்ம பலனைப் பெறுகிறார்கள். அதோபாரும்! துர்யோதனன் குடியைக் கெடுக்க வந்த சகுனி அதோவருகிறான். அவன் கண்ணில் படாமல் போய்ச் சேருவோம் வாரும். விற் போட்டிக்காக ஆயத்தஞ் செய்ய வேண்டியவை பலவிருக் கின்றன.

(பேசிய வண்ணம் போகிறார்கள்).

(சகுனி ஓர் புறமாகப் பிரவேசம்)

சகுனி. (தனிமையில்) துர்யோதனா! உன் மூலமாகவே நான் கௌரவகுலத்தை அழிக்கப்போகிறேன். கொலை! படு கொலை! இருள்சூழ்ந்த அறையில் என்செல்வத் தந்தையை யும் ஆருயிர்ச் சகோதரர்களையும் அநியாயமாகப் படு கொலை செய்த பழிக்குப் பழி வாங்கவே,................. ....துரியோதனா! ....இந்த ஓர் காரியத்திற்காக வே தான்...........நான் உங்களை அடுத்திருக்க ஒப்பி யதும்! அடுத்துக்கெடுப்பதே இனி எனது கொள்கை யாகும். பாண்டவர் மீது உனக்குப் பொறாமையும் அசூ யையும் அதிகரிக்கும்படிச் செய்து, அதனால் உன் அழி வாம் திரு விழாவைக்கண்டு களிக்க வேண்டியதற்கான வழிகளைத் தேடுவதே இனி என்கடமை. அத் திருவிழா விற்கு த்வஜாரோஹணம் இன்று என் சூழ்ச்சியால் ஏற் படுத்தப்பட்ட விற்போட்டியே! அதோ! துர்யோதன னும் துச்சாதனனும்,—.

(துர்யோதனனும் துச்சாதனனும் பிரவேசம்)

போட்டிக்குச் சித்தமாகப் புறப்பட்டாய் விட்டது போல் காண்கிறது.

துர்யோ. ஸித்தமே. அந்த அர்ஜுனன் சாமர்த்தியத்தைப் பார் த்துவிடலாம் இன்று. எனது ஆசிரியர் அர்ஜுனனைப் புகழ்வதைப் பொய்யாக்கி விடுகிறேன் இன்று.

மத்யாவதி—ஆதி

காணுய் என் திறமையை நீ — எந்தன் மாமா

காண்போமின்றனைவரும் கதிரவன் முன் பனி போல்
ஆண்மையுமின்று நேரே அறிகுவோம் அனைவரும் (கா)

சிலைக்கு விஜயனென்று சீர் புகல் குருவுரை
தொலைத்துப் பொய்யாகவே சொல்விப்பேன் என்புகழை (கா)

ச. உன் ஆசிரியருக்கே பக்ஷபாதம் மிகுதி,—. மிகுதியப்பா பக்ஷபாதம்.

துச்சா. அண்ணனுக்கு அர்ஜுனனென்ருல் எனக்கு அந்தப் பீமசேனன். மல் யுத்தம் பழகும் போதெல்லாம் ஆசார்யர் அந்தப் பீமசேனனையே உயர்த்திப் பேசுகிருர்.

ச. விசுவாஸ காதகமப்பா, அவ்வளவும் விசுவாஸகாதகம்! ஸர்ப்பங்களை வளர்ப்பதுபோல், இவர்களையெல்லாம் அரண்மனையில் கொண்டு வந்து வைத்திருக்கிருர், மஹாராஜா! இவர்கள் தொலையும் வரையில் உனக்குக்கேடு தான். கஷ்டந்தான்.

துர். வாஸ்தவமே! வாருங்கள். நாழிகையாகிறது. இந்த விற் போட்டியின் முடிவைப் பொறுத்ததேயாகும் பல ராஜ காரியங்களும்.

ச. நன்ருய்ச் சொன்னுய்! நன்ருய் சொன்னுய். நீ மட்டும் என்னை நம்புவாயாகில் இவர்கள் எவரும் உன்னை அண்ட வொட்டாமல் செய்து விடுகிறேன் பார்.

(பேசிய வண்ணம் துர்யோதனன் சகுனியை அழைத்துக் கொண்டு சந்தோஷத்துடன் போகிருன். துச்சாதனனும் அவர்கள் பின் செல்கிருன்)

—

அங்கம் 1 - களம் 4

ஹஸ்தினபுரி விற்போட்டிக்காக ஏற்படுத்தப் பட்ட இடம்.

[பீஷ்மத் துரோண கிருபாசார்யர்கள் மத்தியில் வீற்றிருக்க, ஓர் புறம் பஞ்சபாண்டவர்களும், மற்ருேர்புறம் துர்யோதன, துச்சாதனன், சகுனி முதலானோர்களும் இருக்கிருர்கள். உப்பரிகை மீது வேடிக்கை பார்த்த வண்ணம் குந்தியும் சிலஸ்திரீகளும் காணப்படுகின்றனர்.]

பீஷ்மர். மெச்சத்தக்கது! அர்ஜுனு! மிகவும் மெச்சத்தக்கது உன் குறித்திறமை! ஆசார்ய சிரேஷ்டரே! இன்று தான் உமது போதனை பலனடைந்து விளங்கியது! அர்ஜுனு! மகத் ஆச்சர்யம் உன் லக்ஷ்யத்திறமை.

அர்ஜுனன். (நமஸ்கரித்து) எல்லாம் ஆசார்யருடையவும் தங்கள் போன்ற பெரியாருடையவும் ஆசிர்வாத பலனே.

துரோண. அர்ஜுனு! பீஷ்மாச்சாரியார் என்னை உங்கள் ஆசார்யராகத் தேர்ந்தெடுத்தது பிசகல்ல வென்பதை நிரூபித்தாய். என்னையும் கௌரவப்படுத்தி, உன் சாமார்த்தியத்தையும் வெளிப்படுத்தினுய் இன்று.

குந்தளவராளி—ஆதி

மெச்சினேன் உன்னை மிகவே—வில் விஜயனே

இச்சகமுன திறல் நிச்சயமுணரவும்
நற்சிலைக்குரு புகழ் நன்கு நிற்கவும் செய்தாய்　　மெ

பாரீர் நீர் கௌரவரே ஓரீர் இவன்றன் செயல்
கூறீர் வீணே குறையென் பேரில் விடுவீரின்　　மெ

துர்யோதனு! துச்சாதனு! நான் வீணில் அர்ஜுனனைப் புகழ்ந்து பேசி வருவதாகக்குறை கூறிவந்தீர்களே—நேரிற் கண்டீர்களா அவன் விற்றிறத்தை?

துர். (ஒருபுறம் சகுனியுடன்) போதும் அவமானம்! வாய்திறவாது போய்விடலாம் வாருங்கள்.

(அம்பும் வில்லுங் கொண்டு கர்ணன் ஆரவாரித்துப் பிரவேசம். அம்பைப் பக்ஷியின்மேல் எய்கிருன்).

கர். இது ஒரு அதிசய வித்தையா?
(துரோணர், கிருபர்பாதங்களில், நமஸ்கரித்து எழுந்து)
ஆசார்ய சிரேஷ்டரே! இதோபாரும் பக்ஷியின் மற்றொரு கண்ணையும் துளைத்து விட்டேன்.
(யாவரும் ஆச்சரியப் படுகின்றனர்.)

துர். சபாஷ்! அர்ஜுனு! உனக்கு சமானமான வீரன் இதோ வந்துளான், கண்டனையா?

கர். அர்ஜுனா! வில் வித்தையில் 'நான் தான்' இணையற்ற வீரனென்று கர்வங் கொள்ளாதே இனி.

அர். அடே! அழையாத இடத்தில் நுழைந்து வீண் ஆரவாரஞ் செய்யும் அதம! வாளாவிருக்கும் என்னை ஏன் வலுச் சண்டைக்கிழுக்கிறாய்? உண்மையில் சாமர்த்தியமுள்ளவனாகில், செய்கையில் காட்டு உன் திறத்தை. வீண் ஏச்சுப்பேச்சு வேண்டியதில்லை.

நாகஸ்வராளி—ரூபகம்

அர். மமதையால் இங்கே வாய் பதறேல்
வசை கொள் ஸூதனே.
கர். மமதையின்றிது வாய்மையே உன்
வரிசை காட்டு நீ.
அர். அகத்தில் நீ பிதற்றின் இதோ
அறுத்தேன் கணையால் அடக்குன் நாவை.
கர். சிலைத்திறலால் செருக்கிடுமுன்
கரத்தைக் கணையால் துணிப்பேனின்றே.

கர். ஹ! ஹ! ஹ! அப்படியாயின் எடு வில்லை.

அர். ஹ! ஹ! அவ்வளவு கர்வமா உனக்கு? வாய்த்திமிரால் வீண் பேச்சுகளைக் கொட்டி என்னை அவமரியாதையாய்ப் பேசும் உன் நாவை, இதோ, இக்கணையால் இரு பிளவாய்ப் பிளக்கின்றேன் பார்!

(வில்லை நாணேற்றி நிற்கிறான்)

கர். வில் திறத்திமிரால் என்னை அவமதித்து, என்னை எதிர்க்க எண்ணி வில்லும் அம்பும் கொண்ட உன் கரங்களை இதோ இருபிளவாக்கித் துண்டிக்கிறேன் பார்.

(வில்லை நாணேற்றி நிற்கிறான்)

துரோ. வீரர்களே, பொறுங்கள். தளர்த்துங்கள் நாணை. விற்றிறத்தில் உங்கள் இருவர் சாமர்த்தியத்தையும் நான் அறிவேன். அதைக் காட்டிக்கொள்ள இது சமயமல்ல. விடுங்கள் க்ஷாத்திரத்தை.

துர். ஆயின் அர்ஜுனன் இந்த வீரனுக்குத் தாழ்ந்தவனே என்பது திண்ணம் ஆகி விட்டது.

அர். துர்யோதனு! என் கோபத்தைக் கிளப்பாதே வீணில்.

கர். உன் கோபம் என்ன செய்யும் கௌரவேசனே ?

துர். ஹே வீர ! நன்று கூறினை நீயே கௌரவர்க்குக் கௌரவத்தைக் கொடுக்கக் கூடியவன். இன்று முதல் நீ என் இன்னுயிர் நண்பன்.

கர். பாக்யம்! பிரபோ! மமதை மிக்க அந்த அர்ஜுனன் கர்வத்தையடக்க, வில்யுத்தம் வேண்டாமென்றால், மல்யுத்தமாவது புரிவதற்கு அனுமதி கொடுக்கப்படட்டும்.

அர். அடே! என்னுடனு மல்யுத்தஞ் செய்யக் கோருகிறாய்? வா இப்பொழுதே! அதிலும் நம் தாரதம்யத்தைக் கண்டு கொள்வோம்.

கிரு. ஹே வீர! த்வந்த்வ யுத்த சாஸ்திர முறைப்படி, உன் பக்கம் நின்று உன் பிருதுகளைக் கூறுவதற்கு யார் முன் வருகிறார்கள், சொல். உன் தாயையும் தந்தையையும் நீ எந்த ராஜாக்களின் குலத்திற்குப் பூஷணமாய் இருக்கிறாயோ அந்த ராஜவம்சத்தையுஞ் சொல். குலமும் குலாசாரமும் இல்லாதவர்களோடு ராஜ குமாரர்கள் சமயுத்தஞ் செய்வது தவறாகும்.

கர். (தனக்குள்) ஹா தெய்வமே! என் துர்ப்பாக்யம் இங்குமா தொடருகிறது! பரசுராமன் சாபம் இப்பொழுதே பலிதமாகப் போகிறதோ!

(வெளிப்படையாக)

கல்யாணி—ஆதி

குலமேது செய்யும் ஜயனே — கோதில் வீரர்க்கு

நலமுற்றார் முன்னோர் பலர் நாடிய பிறப்பாலோ
சலமுற்ற துரோணரும் சரவணபவன் முதல் (குல)

ஹரி பெறு பிறவிகள் அனைத்து மேலானவோ
அண்ணல் கண்ணன் இடைக்குலத்தனைத்துயர்விலனோ
பெரியவர் குணமின்றி பிறவியை மதியார்
பேசு புகழ் மாசு படும் பிரித்தெலை விலக்கின (குல)

குலத்தைப் பற்றி என் விசாரம்? என் வீரம் என் சொந்த உழைப்பின் பயன். க்ஷத்திரிய குலத்தில் பிறந்த தால் மட்டும், வீரமற்ற நபும்ஸகன் அக்குலப்பிறப்பில்லா வீரனை வென்றிடுவானே? வீண் வாத மின்றி த்வந்த்வ யுத்தம் செய்ய எனக்கு அனுமதி தந்தருள்வீராக!

சகுனி. அவன் சொல்வதும் நியாயமாகத் தான் தோன்றுகிறது. பிறப்பு, தெய்வ ஸங்கல்பலமான காரியம்.

கிரு. சாஸ்திரப்படி நீ ஓர் ராஜனாக இருக்க வேண்டுமென்பதே எமது நிபந்தனை.

கர். ஆனால் ஏதாவது ஒரு ராஜ்யத்தைக் குறிப்பிடுங்கள்— அதை வென்று திரும்புகிறேன்.

துர். கர்ண! அவ்வளவு சிரமம் வேண்டியதில்லை உனக்கு. அங்கநாடு என் ஆளுகைக்குட்பட்டதே. இதோ! இதோ! இந்த க்ஷணமுதல் உன்னை அங்க தேசாதிபதியாக்கி னேன். அறிகுறியாக இதோ என் மகுடத்தை உன்சிர மேல் அணிந்தேன். கிருபாசார்யரே, இனியும் ஆக்ஷேப முண்டோ?

சகு. மெச்சினேன் துர்யோதன! மெச்சினேன் உன் சாதுர் யத்தையும் ஔதார்யத்தையும்!! இனி, கர்ணன் இப்போ ட்டியில் கலந்து கொள்ள எவ்வித ஆக்ஷேபணையுமிராது.

கர். (க்ருதக்ஞையுடன்) அஸ்தினபுர மன்ன!

விருத்தம்—அடாண

இன்னானென்று அறியாத எளியேனை முடிகவித்துத்
தன்னோடே அரியணையில் ஸமமாகத் திகழ்வித்த
மன்னாதி மன்னனுக்கு வாழ்வினிலும் தாழ்வினிலும்
என்னுவியுடலெல்லாம் எந்நாளும் உரியனவே.

என்ன கைம்மாறு செய்வேன் இப்பேருபகாரம் செய்த உமக்கு! உமது பகைவர்களைப் போர்க்களத்தில் சின்ன பின்னமாக முறியடித்து, உமது பக்கலிலேயே தோ ளோடு தோள் நின்று உமக்கு உதவிபுரிவேன். இது ஸத்யம்.

(அதிரதன் பிரவேசம்)

அதிரதன். அப்பா மகனே! கர்ண! கௌரவேசர் உன்னை அங்க தேசாதிபதியாக ஆக்கினரா?

கர். (அதிரதன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து) ஆமாம் பிதா. கௌரவேசர் எனக்கு அக்கௌரவம் கொடுத்துளார். அந்தப்பாக்யம் தங்கள் ஆசீர்வாத விசேஷத்தாலும் என் பூர்வ கர்மபலத்தாலுமே.

அதி. (கர்ணனை ஆலிங்கனம் செய்து உச்சி முகர, கர்ணனும் அதிரதனைத் தழுவி நிற்கிருன்)

பீமன். ஹ! ஹ! ஹ! பரதவம்ச ராஜஸிம்ஹத்தை எதிர்த்து நின்றது, இந்த ஸூதபுத்திரன் தானு? அடே கர்ணு! உன் குலத்திற்குத் தகுதியான சவுக்கை அல்லவா நீ கைக்கொள்ள வேண்டும். வில் எதற்கு உனக்கு?

(கர்ணன் பீமனை வெறிக்கப்பார்க்கிருன்)

அர். ஸூதகுலத்திலுதித்த அதிரதன் மகனே! என் அண்ணனை வெறித்துப்பார்ப்பதால் என்ன பிரயோஜனம்? எவ்வளவுதான் உயரப்பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகுமோ?

கர். வீண் பேச்சு எதற்கு? நீ உண்மை வீரனுனல் வா என்னுடன் த்வந்த்வ யுத்தத்திற்கு.

அர். அடே இழி குலத்துதித்த அதம! அர்ஜுனன் கைகளால் கொல்லப்படத் தக்கவனல்ல நீ. உன் வாய்ப் பிதற்றல்களையும் சில வில் வேடிக்கைகளையுங் கண்டு மருண்டு மயங்கிய துர்யோதனன், என்மீதுள்ள பொருமையாலும் அசூயையாலும் உன்னை அங்க தேசாதிபதியாக்கி விட்டான். எனினும், ராஜ்யத்தை யனுபவிப்பதற்கு அர்ஹனேயல்லன் நீ, யச்ஞத்தில் அக்னியின் சமீபத்தில் இருக்கும் ஹவிஸைத் தீண்ட நாய் தகுதியற்றது போல்!

துர். அர்ஜுனு! க்ஷாத்திரப் பேச்சுகளைப் பேசிக் கர்ணனுடன் யுத்தஞ் செய்ய வேண்டியதைச் செய்யாது நிறுத்திவிடப் பார்க்கிருயோ? கர்ணன் அங்க தேசத்திற்கு மட்டுமல்ல, ஸகல புவனங்களையும் தன் தோள்வலிமையால் வென்று ஆளவல்ல ஆண்மையும் சக்தியும் கொண்டவன் காண்.

அர். அப்படியானுல், உன் ராஜ்யத்தை அந்தத் தேரோட்டி மகனிடம் ஒப்புவித்து, நீயும் அவன் கீழ்க் கைகட்டி ஊழியஞ்செய்.

துர். அடே! வல்லமையையும் வீரத்தையும் அறிந்து மதித்துக் கௌரவிப்பதே சுத்த வீரனது அடையாளமாகும். நாழிகையாகிறது. வீண் பேச்சேன்? கர்ணனுடன் யுத்தஞ் செய்ய போகிறாயா இல்லையா?

அர். அடே கர்ணா! உன் போஷகனான துர்யோதனன் முன்னிலையிலேயே, அவன் புகழ்ந்து வணங்கும் உன் வீரம் மதிக்கத் தக்கதல்ல வென்பதை க்ஷணத்தில் ரூபிக்கின்றேன் வா. இதோ

(இருவரும் த்வந்த்வ யுத்தத்திற்குத் தயாராகின்றனர்)

(ஓர் சேகவன் அவஸரமாகப் பிரவேசம்)

சேவகன். பிரபோ, வேடிக்கை பார்த்து வந்த குந்திதேவியார் திடீரென மூர்ச்சித்துப் பிரக்ஞையற்றிருக்கிறார்கள்.

பீஷ்மர். ஹா! அப்படியா! யுத்தம் நிறுத்தப்படட்டும். நாம் போய் முதலில் குந்தி தேவியாரைக் கவனிப்போம் வாருங்கள்.

(துர்யோதனன், கர்ணன், தவிர்த்த யாவரும் செல்கின்றனர்.)

கர். ஹா! ஹா! இவ்வளவு சிரமப்பட்டும் முடிவில் அர்ஜுனன் தப்பிச்சென்றனனே தெய்வ கதியாய்!

துர். தெய்வ கதியே!—. கர்ணா! இச்சமயம் என் ஆசை நான் எண்ணியபடி நிறைவேறாது போயினும், முடிவில் அது உன்னாலேயேதான் பூர்த்தியாகவேண்டும்.

கர். பிரபோ! நான் தங்கள் பக்கலிலிருக்க இனித் தாம் கவலைப் படுவானேன்? தங்கள் ஆசையைத் தெரிவியும், பூர்த்தி செய்விக்கிறேன், என்னால் கூடுமானால்.

துர். கர்ணா! இனிப் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே இடத்தில் வசித்தல் முடியாத காரியம் என்பது நிச்சயம். பாண்டவர்கள் கீர்த்திபெற்றால் கௌரவர்கள் நாசமடைவது திண்ணம். நாம் நூறுபெயர்களிருந்தும் இப்பாண்டவர்களை யுத்த முனையில் வெற்றியுடன் எதிர்த்து நிற்க இயலாதே யென ஏங்கி நின்ற தருவாயில், நீ வந்து என் தோழனானாய். என் அதைரியமும் என்னை விட்டகன்றது. ஆகவே, அன்ப! பாண்டவர்களை அடக்கி யழிக்

வேண்டுமென்ற எனது ஆசாவிருக்ஷத்தைப் பலமளிக்கச் செய்யவேண்டியது இனி உனது பொறுப்பு.

கர். ஆக்ஷேபணையில்லை. அர்ஜுனனைக் காணும்பொழுதெல்லாம் எனது க்ஷாத்திரமும் ஆத்திரமும் அதிகரிக்கிறது. ஆயினும்! தருமனைக் காணும்பொழுதோ, விரோதத் தீ குளிர்ந்து விடுகிறதே!

துர். ஆயின் குருவம்சம் பாண்டுபுத்திரர்களால் அழிபட வேண்டுமென்பதோ உன் அந்தரங்க அபிப்ராயம்?

கர். என்ன?

சுத்த காவேரி—ரூபகம்

நன்றி மறப்போன் நானென்றெண்ணிடேல் கௌரவேச ந

நன்றியை யொருநாளும் மறவேன்
கொன்றுன் பகையைக் கொடுப்பேன் நாடு— (நன்றி)

இன்றே யேற்றேன் பகைமுடிக்க
எனக்கென வேறில்லை வைரி
குன்றவுடலிற் குருதி யெல்லாம்
கொதிக்கச் செய்தேன் சபதம் அழிக்க (நன்றி)

நன்றி கெட்டவனென்று என்னை எண்ணினீர்? கௌரவேசா! என் உதிரத்தின் ஒவ்வொரு துளியும் உமது சேவையிலேயே உபயோகிக்கப்படும். இனி உமது விரோதியாம் அர்ஜுனனே என் வைரி. அவனைத் தொலைப்பதே நான் உமது சேவையின் பொருட்டுச் செய்யும் முதற்காரியமாகும். இதுவே என் க்ஷாத்ரப் ப்ரதிக்ஞையாம். இப்பிரதிக்ஞையை மாற்ற ப்ரத்யக்ஷமாய் என் மாதாவே என்னைவேண்டினும் இணங்கேன்.

(சபதம் செய்கிறான். துர்யோதனன் கர்ணனை ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறான்)

திரை விழுகிறது

அங்கம் 2 - களம் 1

காம்பில்ய நகரத்திற்குப் போகும் பாதை

[குந்தியுடன் பாண்டவர்கள் பிராமண வேடம் பூண்டு வருகின்றனர்]

அர்ஜு. அண்ணா! உமதிஷ்டப்படிப் பாஞ்சாலம் புறப்பட்டோம். துருபதன் சிநேகம் கிட்டுமோ என்னவோ தெரியவில்லை. விதுரரிடமிருந்து செய்தி கிடைக்கு மென்று எதிர் பார்த்து ஏமாந்து போனேம்......................அண்ணா! துருபதனிடம் நாம் ஸ்வய ரூபத்துடன் சென்ருலென்ன?

பீமன். அண்ணா! இந்தக் கோலம் எனக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. வேட்டையாடுவதற்குமில்லை. யுத்தஞ் செய் வதற்கும் உதவாதது. இன்னமும் பாஞ்சாலம் எவ்வ ளவு தூரம் இருக்கிறதென்று கூறுவார் எவரையும் காணேம். அரக்குமாளிகையில் நம்மை வைத்து எரிக் கப் பார்த்த அந்தத் துர்யோதனன்மீது இன்னுமுமா பழி வாங்காதிருப்பது?

யுதிஷ்டிரர். தம்பி! பதருதே. ஓர் அந்தணர் இதோ வருகிருர் பார். அவரைக் கேட்டால் காம்பில்யம் போகும் வழி தெரிய வரும். அவரைக் கேள்.

(ஓர் பிராமணன் பிரவேசம்)

அ. ஐயா, சற்று நில்லும்.

பிராம. (பதில்கூருது போய்க் கொண்டிருக்கிருர்)

பீ. ஓய், பிராமணு! உம்மைத்தான் — செவிடா நீர்?

யுதி. பீமா, பெரியோரிடம் மரியாதையாய்ப் பேசு.

பீ. பிராமணேத்தமரே! ....தாங்கள் எங்குச் செல்கிறீர்? சற்று நில்லும், நாங்களும் வருகிருேம்.

பி. ஓய்! புத்தியில்லையா உமக்கு? போகிறவனைத் தடுத்ததும் போதாது, எங்கு செல்கிறீரென்றுங் கேட்டாய் விட்டது. நானும் வரேனு வா?............நல்ல சகுனந்தான்! தக்ஷிணை வாயில் மண் தான். யாரையா நீங்கள்?

நகுலன். ஐயா நாங்கள் அயலூர்.

பி. பரதேசிகளோ?

பீ. பரதேசியா? யாரையா பரதேசி?

பி. இந்த ஊரல்ல, வேறு ஊராராக்குமென்றேன். அதற்குக் கூடவா இவ்வளவு கோபம்!

அ. காம்பில்ய நகரம் இங்கிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது?

பி. கூட வாருங்கள்............நம்மைப் போலத் தான் போலிருக்கு நீங்களும்.

அ. ஏன், தங்களுக்கென்ன?

பி. எதற்காகக் காம்பில்ய நகரம் போகிறீர்கள் நீங்கள்?

அ. அரசனைக் காண.

பி. சும்மாவா? விசேஷத்திற்காகப் போகவில்லை?

அ. என்ன விசேஷம்?

பி. உங்களுக்குத் தெரியாதா? பாஞ்சால ராஜ குமாரியின் ஸ்வயம்வரம் நாளைக்கல்லவா! பாஞ்சால ராஜ்யத் தலைநகர் காம்பில்யமல்லவா? அங்கே தானே ஸ்வயம்வரம். இன்னும் இரண்டு காதம் தான் இருக்கிறது. புறப்படுங்கள் சீக்கிரம் போய்ச் சேரலாம்.

அ. உமக்கென்ன அவ்வளவு அவசரம்?

பி. போஜனமும் பூரி தக்ஷிணையுந்தான். இல்லாவிட்டால் பெண்ணையடையவா ஓடுகிறேன்!—. வில் வித்தையிற் சிறந்தவனுக்கே திரௌபதி மாலையிடப் போகிறாளாம். அதற்காக ஓர் பந்தயம் வைத்திருக்கிறார்களாம் ஸ்வயம் வரத்தில். என்ன பிரயோசனம்?—. ஹும்!—. ஸ்வயம் வரமே நடந்தேறுமோ என்னமோ?

அ. ஏன் அப்படிக் கூறிவிட்டீர்?

பி. வில்போட்டி மகா கஷ்டமானதாம். அந்த அர்ஜுனன் ஒருவனால் மட்டுந் தான் வெல்லக் கூடியதாம்................

அந்த மகானுபாவன்! .... ஹா! தெய்வமே! ....இனி அத்தகைய பரமபுருஷன் கிடைப்பானு! .... (கண்ணீர் உதிர்க்கிருன்)

அ. பூசுரோத்தமா! ஏன் அழுகிறீர்? அர்ஜுனன் உமக்கென்ன செய்தான்? நீர் இப்படி அவனை நினைத்து வருந்துவானேன்?

பி. அந்தக் காக்ஷியை நினைக்கும் போது என்னையறியாது துக்கம் பெருகுகிறதே! சில நாட்களுக்கு முன்புதான் நான் காசி யாத்திரை சென்றிருந்தேன். ஓர் நாள், அன்னபானுதிகளின்றி, களைப்பு மேலிட்டு, வழியில் ஓரிடத்தில் படுத்துக் கிடந்தேன். அப்பொழுது, உன்னைப் போன்ற ஒருவன், என்னைத் தன் இல்லந் தூக்கிச் சென்று அதிதி ஸத்காரஞ் செய்வித்தான். அவன்தான் அர்ஜுனன். இந்தப் பாவி வாக்கால் "தீர்க்காயுஷ்யமான் பவ" என்று அந்த அர்ஜுன ராஜகுமாரனை வாழ்த்தி வெளிவந்தேனே இல்லையோ, அன்றிரவே பாண்டவர்கள் இருந்த மாளிகை, தீக்கிரையாகி, யாவரும் சாம்பலாய் விட்டனரே! பிராமணன் வாக்கும் பொய்த்து விட்டதே! அந்த அர்ஜுனன் போன்ற தயாநிதி கிடைப்பானு? அவன் மட்டும் உயிருடன் இருந்தால், இந்தப் போட்டிக்கு இவ்வளவு ராஜகுமாரர்கள் காக்கைக் கூட்டம் போல் பறந்து ஓடுவார்களா?

பீ. நல்லவேளை! இந்த மஹான் எங்களை ஆசீர்வதிக்காமல், கோப மொழியே கூறினுரே இன்று. அம்மட்டும் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் தான்.

அ. மித்ரரே! நடந்ததைக் குறித்துச் சிந்தித்தாவதேன்? நடக்கவேண்டியதைக் கவனிப்போம். காம்பில்யம் செல்வோம், புறப்படும். ஸ்வயம்வரக் காக்ஷியையாவது கண்டு களிப்போம்.

பி. (குந்தியைச் சுட்டி) இந்த அம்மாள் யார்?

அ. எங்கள் தாயார்.

பீ. நாம் ஸ்வயம்வர மண்டபம் செல்வதென்ருல் அம்மாவை எங்கே விட்டுச் செல்வது?

பி. அரண்மனைக் கருகில் என் சிநேகிதர் வீடு இருக்கிறது. அங்கே விட்டுச் செல்லலாம் வாருங்கள்.

அ. அம்மா, நாம் புறப்படலாமா?

குந்தி. உடனே புறப்படுவோம். இந்த நற்சமயத்தைக் கைவிடாதேயுங்கள்.

அ. வாஸ்தவமே. உடனே புறப்படுவோம்.

(போகிருர்கள்)

அங்கம் 2 - களம் 2.

உபவனம்.

[தோழியும் பத்மாவதியும்.]

பியாக்—ஆதி

பத்மா.
எங்கும் காணே நானே பதியை
எனதாருயிர்க்கே இனியவரை (எங்கும்)

சங்கரன் சொல்லால் தருமஹனீயா
சுந்திர கவச குண்டலதாரி (எங்கும்)

தினகர கோடி திவ்யப்ரகாசா
மனமகிழ் பொன்னொளி மாற்றிடும் தேசா (எங்கும்)

ஸரஸா! எங்கெல்லாம் நாடித் தேடியும், எனக்காகப் பிறந்திருக்கும் கணவனைக் காண்கிலேனே! இன்னமும் எங்கு தேடுவது? ஒருவேளை ஈச்வரன் எனக்கு ஸ்வப்னம் அளித்ததாக நான் எண்ணியது வெறும் மனப்பிராந்தியேயோ!

ஸரஸா. அம்மா! தாங்களுமா இப்படிச் சந்தேகமும் அதைரியமுங் கொள்வது? கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் ஸத்தியவாக்குப் பொய்யாகாது.

(பத்மாவின் தந்தை விசித்திரசேனன் பிரவேசம்)

விசித்திர. ஹா! பத்மாவதி! உயிருடன் கண்டேனே உன்னை!

ப. (திடுக்கிட்டு நோக்கி) ஹா தந்தையே

(நமஸ்கரிக்கிருள்).

விசித்திரசேனன் அவளை எடுத்து ஆச்வாஸப் படுத்துகிருன்).

வி. பத்மா, இக்காட்டில் எப்படி வந்தாய்? எட்டுத் திக்குகளிலும் என் ஆட்கள் உன்னைத்தேடியலைகிருர்களே. உன் தாய் உன்னைக்காணுமல் நடைப்பிணம்போல் காலத்தைக் கழித்து வருகிருளே! உள்ளது உரையம்மா.

ப. எந்தையே! அரண்மனையில் நான் சிவபூஜை செய்கையில் பரமசிவன் என் முன் பிரத்யக்ஷமாகி, என் புருஷனது அங்க அடையாளங்களைக் கூறி, அவரைத் தேடியடையுமாறு ஆக்ஞாபித்தார். அவ்வாக்ஞைப்படியே, ஸரஸாவை அழைத்துக் கொண்டு உடனே புறப்பட்டேன். புறப்படும்பொழுது சீக்கிரத்திலேயே நாடு திரும்பலாமென்ற பேதைமையுடன், உங்களிடமுஞ் சொல்லிக் கொள்ளாது புறப்பட்டு விட்டேன். அந்தப் பிழையை மன்னிக்கவேண்டும்.

வி. ஈச்வரனுவது!...பிரத்யக்ஷமாவது! ஆக்ஞையாவது! உனக்குப் பூர்ணமாகப் பைத்தியம் முற்றிவிட்டது!.........அப்பொழுதே சொன்னேன் உன் தாயிடம், அந்தப் பூஜைகளை விட்டொழிக்க வேண்டுமென்று. அதனுல் வந்த விபத்துக்கள் தாம் இவ்வளவும். போனது போகட்டும். இனியாவது நான் சொல்வதைக் கேள். புருஷனையாவது.........நீ தேடுவதாவது! ஸ்வப்னத்தை நம்பி வீடுதுறந்து வருவையோ? அடி அசடே, வா போகலாம் அரண்மனைக்கு.

ப. தந்தையே! மன்னிப்பீர்! என் கார்யம் கைகூடாது நான் திரும்பப் போவதில்லை.

வி. கூடக்கூடிய காரியமல்லவே நீ கைக்கொண்டது.

ப. கூடக்கூடியதே என் காரியம். நேற்றிரவுகூட, நான் படுத்திருக்கையில், ஓர் ஸ்திரீ, தேவிபார்வதியே, தானே, ...என்முன் தோன்றி, நீ பாஞ்சாலம் போ. அங்கே

காண்பாய் கவச குண்டலமணிந்த உன் கண வனை, என்று கூறினள். பொய்க்காது ஈச்வர வாக்கு.

ஸ. ஏன் வாஸ்தவமாயிருக்கக்கூடாது? நாம் பல தேசங்களையும் பார்த்து வந்தோம். பாஞ்சாலம் போகவில்லை இன்னம். பாஞ்சாலமும் அருகில்தான் இருக்கிறது. அங்கும் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடலாமே.

வி. (கோபமிக) ஸரஸா! இவள் மனத்தைக் கலைத்ததற்கு நீயே தான் காரணம். ஹா! ஹா! என் அருமைக் கண்மணியின் மனோ நிலைமையைக் கெடுத்த காதகியாம் உன்னை இக்கணமே ஒழிக்கிறேன் பார்.

(வாளை ஓங்குகிருன்.)

ப. (தடுத்து) அப்பா! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்? என் செய்கைக்கு அவள் எப்படிப் பாத்தியப் பட்டவளாவாள்? பாவம்! என்னைப் பாதுகாப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகிருளே. அவள் என்னுடன் வந்திராவிட்டால் நான் எப்பொழுதோ நமனுலகடைந்திருக்க வேண்டியவள் தான். முதலில் என்னைக் கொன்று விட்டுப் பிறகு வேண்டுமானல் அவளைக் கொல்லும்.

வி. பெண்ணே! என்ன சாகசமிது?

ப. சாகசமல்ல, வாஸ்தவமே கூறுகிறேன்.

வி. நடந்ததைக் குறித்து இனிப் பேசுவதில் பயனில்லை. நாம் நகர் போவோம் வா.

ப. நான் பாஞ்சாலம் போய்த்தாளுக வேண்டும். இன்று முதல், ஒரு மாத காலத்திற்குள் என் கணவனைப் பெற்ருல் பெறுவேன்.—இல்லையேல்..............

வி. பிறகாவது நகர் திரும்புகிருயா? நானும் உன்னுடன் வருகிறேன்.

ஸ. அதற்குள் தங்கள் கோரிக்கை ஈடேறியே விடும்.

ப. அப்பா! உமக்கேன் கஷ்டம்? நீர் நாடு செல்லும்.

வி. என் அருந்தவப் புதல்வி காட்டில் திரிய, நான் நாட்டில் சுகிக்க எண்ணுவேனென்றோ கருதினை? உன்னையும் அழைத்துச் செல்லாது நான் தனிமையில் நாடு திரும்பேன் இனி. இது ஸத்யம்.

ப. அப்பா! இனி நீர் உமது மகளுடனும் மணமகனுடனும் நாடு திரும்புவது நிச்சயமே. ஈச்வர கடாக்ஷம் நமக்கிருப்பதும் நிச்சயமே. வாரும் புறப்படுவோம் பாஞ்சாலம். தாங்களும் என்னுடன் வரும்படி பாக்யம் பெற்ற எனக்கு இனி என்ன குறை! ஈச்வரீ! நீ தான் இனி என் கோரிக்கையை சீக்கிரத்தில் ஈடேற்றி வைத்து என் மாதாபிதாக்களின் மனத்துள் மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும்.

ஸ்ரீரங்—ஆதி

ஹர ஹர சங்கர அம்பா நாயக
சுரஜன பூஜித பூரிஜனர்ச்சித

பாலவிலோசன பாலசந்தர தர
பாலயமாம்ஹே பாபவிபஞ்சன

பவனபுக்பூஷித பூரிஜனர்ச்சித
பவபந்த மோசன புவனைக நாயக

(துதித்து யாவரும் செல்லுகிறார்கள்)

அங்கம் 2 - களம் 3.

ஹஸ்தினபுரி அரண்மனை - சகுனி பிரவேசம்

சகுனி. (தனிமை சிந்தித்த வண்ணம்) உண்மையில்,—நிச்சயமாயிருக்குமா? பஞ்சாக்னிக் கொழுந்துகளாம் பாண்டவர்களைக் கொண்டுகௌரவ குலமே வேருடனழியுமென்று நான் கொண்ட நம்பிக்கை வீணாவதா? ....இல்லை. எனக்கு மட்டும் அவர்கள் இறந்தார்கள் என்ற நம்பிக்கை பூரணமாயில்லை. அந்த மாயக் கிருஷ்ணனின் உதவியும் வாத்ஸல்யமும் பாண்டவர் பக்கம் இருக்க, ஏதாவது சூழ்ச்சி நடந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது! இல்லாமலா,—. உலகமுழுவதும் பாண்டவர் மரணத்தைக்குறித்துக் கதறியழுகையில், பாண்டவர் பக்ஷபாதிகளாம் அந்தப் பீஷ்மர் முகத்திலும் விதுரன் முகத்திலும் சிறிதும்

தூக்கக் குறியே இல்லாமலிருக்கிறது. துர்யோதனா! கர்ணன் நட்பை நம்பி அழிவில்லையென்று களித்திடாதே.

(துரியோதனன் குதூகலத்துடன் பிரவேசம்)

துர்யோ. மாமா! அற்றது பாண்டவப்பூண்டு!! ஒழிந்தனர் என் ஜன்ம விரோதிகள். பாண்டவர்கள் எனக்கிழைத்த அவமானங்களுக்கெல்லாம் ஏற்ற பழிவாங்கி விட்டேன்!

சகுனி. பாண்டவர் ஐவரும் இறந்து விட்டதாக உண்மையில் நம்புகிறாயா?

து. போய்ப் பார்த்து வந்தவர்களும் கூறினார்களே!

ச. எனக்கென்னவோ நம்பிக்கையில்லை.

து. நீர் வேண்டுமானால் வாரணாசி சென்று சந்தேகந் தெளிந்து கொண்டு வாரும்.

ச. பீஷ்மரும் கிருபரும் என்ன சொல்லுகிறார்கள்?

து. பாண்டவர்கள் சிரஞ்சீவி என்பது அவர்கள் அபிப்ராயம். எதையாவது நினைத்துக் கொண்டு ஆச்வாஸப் படுத்திக் கொண்டு, இறந்தும் பாண்டவர் புனர் உயிர் பெற்று வருவார்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்களோ? அதோ..........அன்பா, வா.

(கர்ணன் பிரவேசம்)

கர். எதற்காக அவ்வளவு அவசரமாகச் சொல்லி யனுப்பினீர்கள்?

துர். இதோ, இந்த ஸ்வயம்வரப் பத்திரிகையைப் படி.

கர். (பத்திரிகையை வாங்கிப்படித்து) துருபதன் மகள் திரௌபதிக்கு ஸ்வயம்வரமா? வில்வித்தையில் நிபுணனே திரௌபதியை அடைவதா? மத்ஸ்ய யந்திரமா?

துர். ஆம் கர்ணா. வில்வித்தையில் கர்ணனுக்குப் போட்டியாயிருந்த அர்ஜுனன் தான் இறந்துவிட்டான். இனி திரௌபதி உன்னுடையவளேயன்றோ?

கர். சக்ரவர்த்தி தாமிருக்க நான் செல்வேனென்று எண்ணினீர்? அர்ஜுனன்தான் இறந்து விட்டான் என்கிறீரே. நீரும் வீற்றிறங்கொண்ட வீரராகையால் நீர்தான் முதன் முதலில் யத்தனிக்க வேண்டும்.

துர். போட்டியில் நான் தவறி விட்டால்?

கர். தவறி விட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நீர் தவறுவீராகில் என் எஜமானனும் உமக்காக நான் குறி வைத்துப் போட்டியில் வெற்றிபெறுவேன். போட்டியில் நானடையும் பரிசு உம்முடையதேயாகும்.

துர். என்ன? ஸ்வயம்வரப்போட்டியில் நீ வெற்றியடைந்தாலும் திரௌபதி என்னுடையவளா?

கர். சந்தேகமென்ன! கர்ணனு சொன்னசொல் தவறுபவன்?

துர். கர்ணா! அன்பா!! ஸதா உனது எஜமான பக்தியைக்காண்பித்துக் கொண்டே இருக்கிறாய் நீ ஒவ்வொரு செய்கையிலும் சொல்லிலும்.

இந்துஸ்தானி அஸாவேரி—ஆதி

உனதுயர் அன்பை நான் என்ன வென்பேன்

என்ன வென்பேன், நான் எதுரைப்பேன் (உ)

கடமையாய் எண்ணினால், அழகதாமோ—நேசா
அழகதில்லை மேலோர் இகழ்வார் தொல்லை (உ)

ஆயினும் நீ இப்பொழுது சொல்வது மட்டும் நியாயமல்ல.

கர். நியாயமோ நியாயமல்லவோ, நான் சொல்லியது சொல்லியது தான். வாரும் உடனே புறப்படுவோம்.

(கர்ணனும் துர்யோதனனும் செல்லுகிறார்கள்)

சகுனி (தனிமை) துர்யோதனா! கர்ணன் உன்னைச் சபை நடுவில் அவமானப் படுத்தப் போவதை யறியாது ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்து செல்கின்றனே! கையாலாகாத துர்யோதனனுக்குக் கர்ணனு பெண் சம்பாதித்துக் கொடுக்கப்போகிறான்? ராஜ சபையில் துர்யோதனனுக்கு நல்ல மரியாதை தான்! வெற்றியடைந்த வீரனை விட்டுத்

தோல்வியடைந்த துர்யோதனனுக்கா திரௌபதி மாலையிடுவாள்? ....பாண்டவர் இறந்தது வாஸ்தவமோ பொய்யோ—ஸ்வயம்வர மண்டபத்தில் துர்யோதனன் அவமானப் படப் போவது மெய்யே. இதையாவது கண்குளிரக் கண்டு ஆனந்திப்பேன்.

(போகிறான்)

அங்கம் 2—களம் 4

பாஞ்சாலம்—ஸ்வயம்வர மண்டபம்.

[துருபதனும், தோழிகளுடன் திரௌபதியும், திருஷ்டத்யுமனனும், பல அரசர்களும், ரிஷிகளும், பிராமணர்களும், அவர்களுள் பிராமண வேஷத்துடன் பஞ்ச பாண்டவர்களும், துர்யோதனனும், கர்ணனும், சகுனியும் கிருஷ்ணனும்—மத்தியில் மத்ஸ்ய யந்திரம்.]

திருஷ்டத்யும்னன் இந்தச் சபையில் மத்ஸ்யத்தை அடித்து வீழ்த்துவார் எவருமில்லையா?

சகுனி சபை தேவசபை மாதிரி தானிருக்கிறது. திரேதா யுகத்தில் ஸ்ரீராமசந்திரன் சிவதனுஸை முறித்து ஜானகியை மணந்தாராம். இந்த த்வாபர யுக முடிவில் மத்ஸ்ய யந்திரத்தில் வெற்றி பெற்று திரௌபதியின் கரங்களைப் பற்றப்போகும் பாக்யவான் யாரோ?.........எனக்குத் தோன்றுகிறது கிருஷ்ணன் ஒருவனால் தான் இது ஆகக்கூடிய காரியமென்று.

கிருஷ்ணன் எனக்கிருக்கும் மனைவிகள் போதாதா?.........ஏதோ பந்தயப் போட்டி என்றார்களே, வேடிக்கை பார்த்துச் செல்லலாமென்று வந்தேன்......இன்னமும் என் தாமதம்? துர்யோதனா! அர்ஜுனன் தான் கிடையாதே. அடுத்தபடி நீ தானே. எழுந்திரு. வெல் திரௌபதியின் கரங்களை!

கர். கௌரவேசா! என் தாமதம்? தயங்காமற் சென்று வெற்றி பெற்று வருவீராக!

(துர்யோதனன் யத்தனித்துத் தோல்வியுற்று அவமானத்துடன் திரும்புகிறான்.)

கிரு. அடாடா! வில் வித்தையில் சமர்த்தனென்று சொல்லப்பட்ட துர்யோதனனே தோல்வியுற்று விட்டால் பிறகு

யாரால் முடியும் இம்மத்ஸ்யத்தையடிக்க! அர்ஜுனனைத் தவிர்த்து வேறு எவராலும் ஆகக்கூடியதல்ல தான் இந்த வித்தை !

சல்லியன் நான் முயற்சித்துப் பார்க்கிறேன்.

துருபதன் மத்ராதிபதி! வாருங்கள். காப்பாற்றுங்கள் பிரதிக்ஞையை.

சல். (சல்லியன் முயன்று தோற்கிருன்)
அந்தச் சக்கரத்தில் துவாரமில்லை போலிருக்கிறது.

திருஷ்ட. ஹும் ! இனி எவருமில்லையா, முன் வருவதற்கு, சல்லிய மகா ராஜாவின் சந்தேகத்தை ஆதார மற்றதென்று நிரூபிக்க ?........பதில் காணேம். ஹா ! ஹா ! இவ்வுலகே வீர சூன்யமாய் விட்டதா ? என் பிரதிக்ஞை வீணுய்ப் போகும் கதியுண்டாகியதோ ?

கர். திருஷ்டத்யும்ந ! உன் பிரதிக்ஞை வீணுய்ப் போகாத படி நான் காக்கின்றேன். ஒழி உன் கவலை.

திரு. ஹா! ஹா! அர்ஜுனனுக்கே சமமான விற்றிறங் கொண்டவன் கர்ணன் ஒருவனே! கர்ண, எதோ—உன் சாமர்த்தியத்தைக் காண்போம்.

(கர்ணன் முன் வந்து வில்லையெடுத்து நாணேற்றிக் குறி வைக்கிருன்)

திரௌபதி அண்ண ! அப்பா ! சற்றுப்பொறுங்கள். இவன் ஸூதபுத்ரன் அல்லவோ ?

கானடா—ஆதி

இழிகுலத்தனலனே கர்ணன் (இழி)

இழி குலத்தோன் மிக வீரனே எனினும்
ஏலேன் மாலையிட இது கொள்ளும் மனதில் (இழி)

ஈன குலத்துதித்த எவரையும் நான் வரிக்க மாட்டேன்.

கர். (திடுக்கிட்டு நிற்கிருன்) உயர் குலமே இவள் கோரிக்கையாயின் உலகிற் சிறந்த வீரரைத்தேட ஏன் இந்த ஸ்வயம் வரம் ஏற்படுத்தப்பட்ட வேண்டும் ?

துர். த்ருஷ்டத்யும்ந ! உன் தங்கை சொல்வது நியாய விரோதமானது. ஜாதி வேறுபாடில்லாமல் எல்லா வீரர்

களையும் நீ தானே வரவழைத்தாய்? பந்தயந்தொடங்கு முன்னராவது திரௌபதியின் நிபந்தனையை அறிவித்திருக்க வேண்டும். இச்சமயம் அவள் ஆக்ஷேபம் செல்லத் தக்கதல்ல.

திருஷ்ட. திரௌபதி, நீ...............

திரௌ. என் உடலில் உயிரிருக்கும் வரையில் ஸூதகுலத்தில் நான் சம்மதித்துப்புகேன். இது ஸத்யம்.

துர். த்ருஷ்டத்யும்ன! நியாய விரோதமாகத் தோன்றும் திரௌபதியின் சபதம் நிறைவேறவேண்டுமாகில், சுத்த க்ஷத்திரிய குலத்திற் பிறந்தோமென்ற மமதை மிக்குப் பேசும் அவள் மூத்தோனும் உன் பிரதிக்ஞை, பொய்யெனத் தீர்மானமாக வேண்டும். என்ன சொல்லுகிறாய்?

தொடர்ச்சி (சரணம்)

திரௌ.

அண்ணன் நன் மனதை அலைத்திட வேண்டாம்
அரியவெனது குடி விளங்கவே செய்வேன்
கண்ணிய அரசர் குலம் சனமிழவாதென்
அண்ணன் உரை தவறா வகையுமே செய்வேன்
(இழிகுல)

என் அண்ணன் மனதைக் கலைத்துக் கலவரப்படுத்த எவரும் முயற்சிக்க வேண்டியதில்லை. என் குலமகிமை விளங்கவே செய்வேன் நான். என் சபதத்தை நிறைவேற்றியே தீருவேன். சுத்த க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவனும் என் அண்ணன் பிரதிக்ஞையும் பொய்யாகாதிருக்கவே செய்வேன் நான்.

கிரு. திரௌபதீ! உயர் குலத்துதித்த உத்தமிக்கேற்ற வார்த்தைகளே புகன்றாய் நீ.

கர். பாஞ்சாலீ! இந்தப் பந்தயத்தில், அந்த அர்ஜுனனும் இந்தக் கர்ணனும் தவிர வேறெவராலும் வெற்றிபெறுவதென்பது இயலாத காரியம். பகட்டமான காரியம் எதுவும் நீ செய்து முடிக்குமுன் ஓர் உண்மையை அறிவிக்கிறேன் கவனி. உன்னை மணப்பதற்காக நான் இங்கு வரவில்லை. இப்பந்தயத்தில் நான் வெற்றி பெறுவேனாகில், உன்னை ஹஸ்தினபுரி அரசியாக்கவே தீர்மானித்து

வந்தேன். நான் இப்பந்தயத்தில் பிரவேசிப்பதற்கு இனியும் உனக்கு ஆக்ஷேபமுண்டோ ?

திரௌ. சுத்த வீரரே, வெகு நன்கு உமது வார்த்தைகள் ! பந்தயத்தில் நீர்வெற்றிபெற்று என்னையடிமையாக்கித் தோல்வியடைந்த பட்டச் செருக்குற்ற ஒருவனுக்கு விற்கவா வந்தீர்? குலஸ்திரீகளைத் தாம் செய்த சபதத்தினின்றும் பிறழும்படித் தூண்டுவது தானோ சுத்த வீர லக்ஷணம் ?

கர். சே !—நான் மதிகெட்டேன், நீ கதியற்றாய் !

(வில்லையெறிந்து விரைந்து சபையை விட்டுச் செல்ல யத்தனிக்கிறான்.)

துர். கர்ணா, நில் அப்படியே! என் உத்திரவு.

கர். எதற்கு ? பட்ட அவமானம் போதாதா ?

துர். அவமானமா !......செருக்கு மிக்க இச்சிறுக்கியின் கரங்களை இனிப் பற்றுபவன் எவன் காணலாம். திருஷ்டத்யும்னா! உன் தங்கை இச்சபையில் கூறிய வசைச் சொற்களுக்குப் பழி வாங்காது செல்லோம். என்ன கூறுகின்றனை ?

திரௌ. என் அண்ணன் ஏற்படுத்திய பந்தயத்தில் உயர் குலமாம் ப்ரம்ம க்ஷத்திரிய வம்சங்களில் பிறந்தவனாய், வெற்றி பெறும் வீரனுக்கே நான் பணமாலை சூட்டுவேன். அத்தகைய வீரன் இல்லையென்று இன்று முடிவாகத் தீர்மானிக்கப் படுமாகில், இச் சரீரத்தை இங்கே வீரமற்ற இவ்வளவு பிரம்ம க்ஷத்திரிய கூட்டத்தின் மத்தியில் அக்னி தேவனுக்கு அர்ப்பணஞ்செய்வேன். அடிக்கடி வீண் வாதம் எதற்கு இனி இவ்விஷயத்தில் ?

(அர்ஜுனப் பிராமணன் முன் வந்து)

அர்ஜு. பாஞ்சால மன்னன் பெற்றெடுத்த பெண் சிங்கமே !

விருத்தம்—சங்கராபரணம்

துருபதன் தன் வேள்வியினில் தோன்றிய நல் பெண் அணங்கே
பெருகவையை மதியாது பேசுவதும் அழகாமோ
அரசர் தமில் பெருவீரர் இங்கு இலரேல் அந்தணர் தாம்
வரிசிலையால் இலக்கு எய்தல் வசையன்றே—வருகுவனே

வீரமற்ற பிரம்ம க்ஷத்திரியசபையென்றுபொதுவாக அவமதித்துக் கூறவேண்டாம் இம்மகாசபையை! கர்ணனைத் தான் அவமதித்து விட்டாய். அப்படியிருந்தும் க்ஷத்திரிய வீரத்தை நிலைநாட்ட முன் வருவோர் வேறு எவரையுங் காணேம்.—எந்த மன்னனுக்காகக் கர்ணன் பரிந்து பேசினனே, அந்த மன்னன், அரியாஸனத்தில் அமர்ந்து அதட்டிப்பேசிக்கொண்டிருக்கிறனே யொழிய, அரங்கத்தின் முன் வந்து ஆண்மையைக் காட்ட யோக்கியதை யற்றுவிட்டான். நீ கோருவது உயர்குலத்து வீரனே யாதலால், இப்போட்டியில் நான் பிரவேசித்து வெற்றி பெற்றால் பரிசை நானடைய எவ்வித ஆக்ஷேபமு மில்லையே?

கிரு. ஆக்ஷேபமே கிடையாது. திரௌபதி வாக்கால் பிரம்ம க்ஷத்திரிய வீரரென்று கூறியிருக்கிறாள்.

துர். என்னையும் க்ஷத்திரியர்களையும் அவமதித்துப் பேசும் துடுக்கு மிக்கப் பிராமணா! பைத்தியம் தலைக்கேறிவிட்டதா? அல்லது உன் ஆயுள் முடிவு அடையுங்காலம் கிட்டிவிட்டதா?

அர்ஜு. என் ஆயுள் முடிவடையுங் காலம் வரவில்லை. உன் கர்வம் முடிவடையுங்காலந்தான் கிட்டி விட்டது.

பிராம. ஹா! ஹா! என்ன பதட்டம்! ஓ பைத்தியக்காரப் பிராமணா! பைத்தியம்பிடித்து ஏன் இப்படிச்சபையில் பிதற்றுகிறீர்? சும்மா உட்காரும்.

சகுனி. ஹே பிராமணச்சிறுவ! ஆத்திர மிகுதியில் பேசியவார்த்தைகளைப் பொருட்படுத்தாது மன்னிக்க ஹஸ்தினபுரி மன்னனை வேண்டி உயிர்ப்பிச்சை பெற்றுச் செல்.

அர்ஜு. ஆஹா! ஸ்வபம் வரப் பந்தயத்தில் தோல்வியுற்றுப் பெண்ணைச் சம்பாதித்துத்தரப் பிரிதொரு வீரனை முன்னிற் கனுப்பிய அந்த வீர சிகாமணி முன்னர் வணங்க வேண்டுமோ?......பாஞ்சால மன்ன! இதோ பாரும் நொடிப்பொழுதில் நீர் நிர்ணயித்த நிபந்தனைப்படியே அம் மத்ஸ்யத்தை அடித்துத் தள்ளுகிறேன்.

(வில்லையெடுத்து மத்ஸ்யத்தை அடித்துத் தள்ளுகிறன். திரௌபதியும் மணமாலையை அவன் கழுத்திலிடுகிறாள்.)

கர். ஹா! ஹா! இறந்த அர்ஜுனன் உயிர்பெற்று வந்து விட்டானு?

கிரு. ஆமாம். அப்படித்தான்.

திருஷ்ட. ஹே, வீரகேசரீ!

(தழுவிக் கொள்கிருன்)

தர்ம. (நகுல சகாதேவர்களை நோக்கித் தனிமையில்.) இனி நாம் இங்கிருப்பது பிசகு! பீமனும் அர்ஜுனனும் இருக்கட்டும். நாமிருந்தால் நமது வேஷம் வெளிப்பட்டு விடும்.

(மூவரும் வெளி யேறுகின்றனர்)

துர். தர்ப்பைப்புல்லைக் கீழே போட்டுவிட்டு, வில்லேந்த வந்து விட்டார்களோ பிராமண சிரேஷ்டர்கள்? கர்ணு! சல்லிய மகாராஜா! எடுங்கள் ஆயுதங்களை! இப்பிராமணப் பூண்டையே ஹதஞ்செய்து விடலாம்!

கிருஷ். துர்யோதனு, வெகு அழகு உன் வார்த்தைகள். இந்த எளிய பரீக்ஷையில் ஜயமடைய உங்களெவர்க்கும் சக்தியைக்காணேம்! தனது திறமையால் இந்த பிராமணச் சிறுவன் வீர கௌரவத்தை நிலைநிறுத்தி இங்குள்ள அனைவருடைய மானத்தையும் காப்பாற்றியதற்காக அவனைத் தண்டக்க வோ தயாராகிறீர்கள்?

துர். போதும் உனது சாதுர்யப் பேச்சு. ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் குருட்டுக்குறியாக மத்ஸ்யத்தையடித்த இப்பிராமணனை ஓர் வீரனுக மதித்தோ பேசுகிறிர்! உண்மை வீரனுயின் எங்களை எதிர்த்து நிற்கட்டும்.

அர். இதோ, தயார். த்ருஷ்டத்யும்னு, கொடும் எனக்கு வில்லும் அம்பும்.

பீம. மண மகனே! மனந்தளராதே! நான் இருக்கிறேன் உன் பக்கத்தில் என் கைகளே ஆயுதங்கள். இத்தனை பேர்களையும் சிதற வடிக்கிறன்.

பிரா. பேஷ், பேஷ்! பிரத்யக்ஷ ஆஞ்சனேயனே இவன். பிரம்ம தேஜோ பலம்! பலம்!

(குழப்பம்—யுத்தம்)

திரை விழுகிறது

அங்கம் 2 - களம் 5

ஆற்றங்கரை — அஸ்தமனசமயம்

கர்ணன். (தனிமை) அவமானம் .... ஓர் பெண்ணால் அவமானம்! என்னே அவள் குலச்செருக்கு! ஹா, ஈசா! தோள்களில் வீரமும் மனத்தில் தீரமும் கொடுத்த எனக்கு ஈனப்பிறப்பென்னும் களங்கமுண்டாக்கி ஆதி முதல் அவமானத்திற்கு ஆளாக்கி வருகின்றனையே! இழிகுலத்தோனெனவே துரோணர் என்னைச் சிஷ்யனாக்கிக் கொள்ள மறுத்தார். என் குருநாதரும் என் வீர தீரத்தையும் லக்ஷியஞ் செய்யாது நான் இழி குலத்தோன் என்பதை யறிந்ததும் கடுஞ்சாபம் கொடுத்துச் சென்றார். பாண்டவ கௌரவர்களுக்கு உண்டாகிய விற்போட்டியில் இழிகுலத்தோனென அவமதிக்கப் பட்டேன். துர்யோதனனது தயாள குணத்தால் அது சிறிது மாறி ஒரு பதவியை யடைந்தேன்.

சாபங்கா—திரிபுட

குலமெனுமோர் கொடுமை பொல்லாதே
கொள்ளத் தகாதே சற்றும் நல்லோரே (குல)

பிறப்பினால் ஏற்பட்ட அவமதிப்புடன் எனக்குண்டான சாபத்தொடர்ச்சிகளும் என் மனத்தைக் கலக்கி வருத்துகின்றனவே! வேட்டை மார்க்கத்தில் மானென நினைத்து எய்த அம்பு ஓர் ரிஷியின் யக்ஞப் பசுவைத் தாக்க, அவர் மகத்தான கோபங்கொண்டு யுத்த முனையில் என் ஜன்ம வைரியை எதிர்த்து முறியடிக்குந் தருவாயில் என் தேர்ச்சக்கரம் மண்ணிற் புதைந்து இடைஞ்சலுறுத்தக் கடவதெனச் சபித்துச்சென்றனரே! அதுவும் போதாதென, தற்செயலாய் என் தேர்ச்சக்கரம் ஓர் கன்றின் மீதேறி, அதனைக் கொல்ல, கன்றிழந்த பசுவின் அரற்றலைக்கண்டு சகியாத பூசுரர், நானும் என் தேர்ச் சக்கரத்தின் கீழ் மரணமடைய, என் தாய் என் உடலைத் தழுவிக் கதறுவாளெனப் பொய்யா மொழி கூறிச் சென்றனரே,

சாரங்கா—(தொடர்ச்சி)

தருசாபமோ கடினம் என்மீதினி
ஸஹிக்கவொண்ணு இவை என்னுலே (தரு)

திரௌபதியை அடைந்தவன் என் வைரி அர்ஜுனனே தான்! .... ஹா! ஹா! அப்பெண்ணும், பூசுரன் கோலங்கொண்ட அவ்வர்ஜுனனும், என்னையும் துர்யோதனனையும் அவமதித்துக்கூறிய சொற்கள் இன்னமும் என் மனதைத் துளைக்கின்றனவே!........... இன்னமும் எதற்காக என் கையில் வில்? முதுகில் அம்பருத்தூணி? கச்சையில் இக்கூறிய வாள்?

(அவைகளை யகற்றி)

இந்த வீண் உடலைச் சுமந்து திரிவதில் என்ன பிரயோசனம்?

ஆயினும், என் வீர வைரி உயிருடன் இருக்கிருனே! பாக்யலக்ஷ்மி,....அதிர்ஷ்ட தேவதையல்லவா அவன் சார்பில் இருந்துகொண்டு என்னை அவமானப் படுத்துகிருள்! இருமுறை அவள் முன் அவமானமடைந்தேன். ஹே! அதிர்ஷ்ட தேவதே! பெயருக்கேற்ருப்போல் என் திருஷ்டிச்குப் படாமலேயே யன்ருே என் பின்னிருந்து கெடுக்கிருய், என்னை! கொடியவள் நீ! மகா கொடியவள் நீ! அந்த அதிர்ஷ்ட தேவதை மட்டும் இப்பொழுது என் திருஷ்டிக்குப் படுவாளாகில் உயிரை மாய்த்துக் கொள்ள இருக்கும் நான் என் கைவாளால் அவளை மனமாறச் சிதைத்து வதைத்துத் திருப்தியடைவேன்.... .... அவள் என் கண்ணில் படாள்! சாபங்கள் பல தாங்கும் என்னுல் இனி என் வீர வைரியாம் அர்ஜுனனை வெல்லுதல் அரிதே யாகும். அதோ! கதிரவனும் குடதிசைக் கடலில் முழுகுகிருன் என் அவமானங்களைக் கண்டு சகியாதவன் போல்!

(பத்மாவதி கையில் மணமாலையுடன் மெல்ல ஒருபுறமாய்ப் பிரவேசித்துக் கர்ணனைக் கண்டு திடுக்கிட்டுக் கவனித்து நிற்கிருள்)

காரிருள் இன்று இப்பூவுலகைச் சூழுமுன் சூத புத்ரன் கர்ணன் பெயர் இப்பாழுலகில் அழிந்து விடட்டும்! சூர்ய தேவனே! உம்மையே என் இஷ்ட தேவதையாக

நினைத்து வந்தேன்! என்முடிவுக்கு நீரே சாக்ஷி!....மனமே! சாந்தியுடன் இரு! இறப்பதற்கு முன் அரை நாழிகை யேனும் நிஷ்களங்க மனத்துடன் நிஸ்சல பக்தியுடன் பரமாத்மாவின் பாதகமலங்களை ஸ்மரிப்பாய்,

(மேற்கு நோக்கி முழந்தாளிட்டுக் கரங்குவித்துக் கண்மூடி பகவத் ஸ்மரணையில் ஆழ்கிருன்)

(பத்மாவதி அவன் முன் வருகிருள்)

பத்மாவதி. (தனக்குள் ஒரு புறமாய்) அதோ! அவர் தானே?............... ஆம். கதிரவன் கிரணங்களைப் பழிக்கும் கவசத்தின் காந்தி யும் ஜகஜ்ஜோதியாய் விளங்கும் குண்டலங்களும், சூர்ய காந்தியொத்த கண்ணொளியுங் கொண்ட இவரே என் நாதன்.

சுரத்—ஏக

ஜய ஜய ஜகதம்பா
கங்காதர முகாப்ஜ ப்ருங்கா

தேவி மஹிமா	அபார
பாவனதம	மோஹஹாரி
தாபஸஜன	விித்திரூபி
ஹேமஹேச	பத்னி (ஜ)

இன்றே என் தவம் பலித்தது. ஈச்வர த்யானத்தில் ஆழ்ந் திருக்கிறார்! த்யானம் முடிந்ததும் இம்மாலையை இவர் கழுத்திலிட்டு இவரையே அடைக்கலமென அடைவேன்.

(சற்று பின்புறம் உட்காருகிருள்— கர்ணன் எழுந்து கையில் கடாரியைத் தூக்கித் தற்கொலை செய்யத் துணிகையில், பத்மாவதி அவன் கையைப்பற்றுகிருள்)

கர்ணன். (திடுக்கிட்டு பத்மாவதியை உற்றுப்பார்த்து) யார் இது? அதிருஷ்ட தேவதையா? பாக்ய லக்ஷ்மியா? எனது அந்தி காலப் பிரார்த்தனையை ஈடேற்றி வைக்கு மாறு என் இஷ்ட தேவதை இப்பாக்ய லக்ஷ்மியை என் முன் அனுப்பி வைத்தனரோ?

(கொல்ல யத்தனித்துக் கடாரியை ஓங்குகிருன்)

பத்மா. பிரபோ! ஈச்வர ஆக்ஞையை மேற்கொண்டே தங்களை நாடித் தேடி யடைந்தேன்.

கர்ணன். குல கர்வம் மிக்க திரௌபதியைச் சும்மா விடுத்து வந்தே னென்ற தைரியத்தால் அதிகார மமதை முற்றிய நீ என் முன் வந்திருப்பாயாகில் தவறே செய்தவள் ஆவாய். யார் நீ?

ப. நான் ஓர் ராஜ குமாரி. என் பெயர் பத்மாவதி. என் பிதாவின் பெயர் விசித்ரசேனன். எனக்கேற்ற பதியைக் கோரிச் சிவபூஜை செய்து வந்ததின் பலனாக ஈச்வரன் ப்ரத்யக்ஷமாகிக் கவசகுண்டலதாரியாகிய தங்களை நாடித் தேடியடையும்படி ஆக்ஞை யிட்டதால், பலவிடத்துந் தேடியலைந்து இன்றே இவ்விடத்துத் தங்களைக் கண்டு அடைந்தேன். அடியாளை அங்கீகரித்து அருள வேண் டும்.

க. பைத்யக்காரி! நான் இன்னானென அறிவையா?

ப. யாராயிருந்தாலென்ன? ஈச்வராக்ஞைப் படி நான் தங்களை என் நாதனாக வரித்து விட்டேன். இன்று முதல் நான் தங்கள் அடிமையே.

க. பேதாய்! நான் இழிகுலத்தவனாம் சூதபுத்ரன். இந்த சூரியாஸ்தமனத்திற்குள் உயிர் துறக்கப் போகுபவன் பாக்ய ஹீனன். வேறெந்தப் பாக்யசாலியையாவது கைப்பிடி, போ.

ப. நாதா! தாங்களே என் நாதன் தாங்கள் சூர்யாஸ்த மனத்திற்குள் இறக்க வேண்டியது அவசியமானால், தங் கள் மனைவியாம் நானும் தங்களைத் தொடர்ந்து தாங்கள் செல்லும் ஸ்வர்க்கத்திற்கு வரத் தயாராயிருக்கிறேன்.

க. பாவாய்! உன் மனோதிடம் மெச்சத் தக்கதே! சுயம்வர மண்டபத்தில் குல கர்வத்தால் என்னை அவமதித்து திரஸ்கரித்ததும் ஓர் பெண்! இப்பொழுது என் தௌர் பாக்கிய சரிதையைக் கேட்ட பின்னரும் பிடிவாதமாய் என்னை மதித்து நாதனாகக் கோருவதும் ஓர் பெண். உல கம் அழிவதும் பெண்ணால்! காக்கப் படுவதும் பெண் ணால்! ஹே ஸுந்தரி! நான் செய்திருக்கும் பிரதிக்ஞை ஒன்றிருக்கிறது. அதைக் கேட்டு விட்டு உன் மனதைத் தீர்மானஞ் செய்து கொள்வாயாக.

ப. தங்கள் பிரதிக்ஞை எதுவான போதிலும், தாங்களே என் பதியெனத் தீர்மானித்து விட்டேன்.

க. பெண்கள் நாயகமே! என் வாழ்வின் ஆரம்பத்திலேயே என் குரு நாதரின் சாபத்திற்கு ஆளானேன். அன்று பூண்ட விரதம் இது. என்னை அடைந்தவர் எவராயினும், அவருக்கு என்னிடமிருக்கும் எதையும் இல்லையெனக் கூறு விரதமே. ராஜ்யம், தனம், தான்யம், மனைவி, மக்கள், உடல், உயிர், அனைத்தையும் கேட்டவர்க்குக் கொடுக்கக் கடமைப் பட்டவன். இன்னமும் என்னை நாடுவையோ? தீர்க்காலோசனை செய். பதறாதே.

ப. பிரபோ! என் உடல் உயிர் அனைத்தையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்து விட்டேன். இனி தாங்கள் கொண்ட விரதமும் என் விரதமேயாகும்.

க. அப்படியா! என் பாக்ய லக்ஷ்மி நீயே! என் குலத்தை விளக்க வந்த அதிர்ஷ்ட தேவதையே நீ! உன் பார்வைக்கு முன் மரணம் நிற்க மாட்டாது தோல்வியடைந்து பறந்தோடி விட்டது. அவமானத்தால் அதைர்யமடைந்த என் மனத்தில் அளவிலா ஊக்கமும் மகிழ்ச்சியும் பொங்கித் ததும்பி விட்டது. தானாக என்னை வலுவில் வந்தடைந்த பாக்ய லக்ஷ்மியே. தள்ளேன் உன்னை! கொண்டேன் உன்னை தர்மபத்னியாக........ அங்காதிபன் கர்ணன் மனைவியே நீ.

நீலாம்புரி—ஆதி

அம்பா நீலாய தாக்ஷி
கருணா கடாக்ஷி அகில லோக சாக்ஷி
கடாக்ஷீ—(அம்பா)

பிம்பாதரி, சித்திரதி பிம்பாதரி
பிந்து நாதவ சங்கரி சங்கரி
அம்புஜாரமண ஸோதரி ஆதரி
அம்பரி காதம்பரி நீலாம்பரி (அம்பா)

(செல்கிறார்கள்)

அங்கம் 2 - களம் 6.

ஹஸ்தினபுரி - கெளரவர் கோலு மண்டபம்

(சகுனியும் யுதிஷ்டிரரும் சூதாட்டமாட, துர்யோதனனும் கர்ணனும் கவனித்தவண்ணம். திருதராஷ்டிரன், பீஷ்ம துரோண கிருபாசார்யர்களும், பிரதிகாமி துச்சாதனன், விகர்ணனுதி கெளரவர்களும், விதுரரும், பீமன், அர்ஜுனன், நகுல சகதேவர்களும். இதர ராஜ சேவகர்கள் முதலாயினோர் இருக்கை.)

சகுனி. ஜயம் ! இந்த முறையும் ஜயம் நம் பக்கமே.

துர்யோ. சபாஷ் ! மாமா, சபாஷ் ! நாடு நகர் அனைத்துமிழந்த இவ்வைவரும் இனி எனது அடிமைகளே ! பந்தயப்படி இவர்கள் பன்னீராண்டு வனவாஸமும் ஓராண்டு அக்ஞாதவாஸமும் செய்தல்லவா திரும்பவேண்டும் ?

சகுனி. ஆம். யுதிஷ்டிரரே ! பந்தயம் வைப்பதற்கு இன்னமும் ஏதாவதுளதோ ?

கர்ணன். திரெளபதியின் கதி என்னவாவது ?

சகுனி. மறந்தேன். யுதிஷ்டிரரே! அந்தப் பாக்யலக்ஷ்மியைப் பணயமாகவையும். நீர் இழந்த பாக்யமனைத்தையும் திரும்பப்பெறினும் பெறலாம்.

துர்யோ. அது தான் சரி. பாஞ்சாலியே தருமனின் பந்தயம் ! கடைசி ஆட்டம் ஆடுங்கள். தர்மன் ஜயித்தால் இழந்த அனைத்தும் பெறுவான்.

விதுரன். பீஷ்மரே ! துரோணரே ! கேள்விமுறை கிடையாதா இந்த அக்கிரமத்திற்கு ? இந்த அக்கிரமத்தைத்தடுக்க எவரும் முன்வரக்கூடாதா ? துர்யோதனு! சகுனியை நம்பிக்கெடாதே. உன் சகோதரர்களாம் பாண்டவருக்குத் துரோகம் எண்ணுதே. நீ அழிவது திண்ணம். இத் துடனுவது இந்தச் சூதாட்டத்தை நிறுத்திப் பிழைக்கும் வழியை நாடு !

துர்யோ. சிற்றப்பா முறையில் புத்திபுகட்ட வந்துவிட்டாயோ? என்மீது உனக்கிருக்கும் அன்பு வெகுநாளாய்த் தெரியு மெனக்கு. போ என்சபையைவிட்டு. டிசையில் உட் கார்ந்து கிருஷ்ணன் பெயரை மென்று தின்று கொண் டிரு.

விதுரன். துஷ்ட சகவாஸம் கூடாதுதான். இதோ போகிறேன் இச்சபையை விடுத்து.

(போகிறான்).

துர்யோ. தொலைந்தான் என்விரோதி! ......யுதிஷ்டிரா! ...... மாமா ......நடக்கட்டும் ஆட்டம்.

யுதிஷ். சரி.

(ஆடுகிறார்கள்).

சகுனி. சபாஷ்! ஜயித்தேன்.

துர்யோ. சபாஷ், சபாஷ்! மாமா! எங்கே

பந்துவராளி—ரூபகம்

உன்னாலேயல்லவோ,
உலகத்தையாள்வது சகுனிமாமா
உன்னையன்றிவேறு,
உற்றதுணையுண்டோ சகுனிமாமா—

கைக்குக்கண்ணாடிஎன்
கண்ணுக்குகண்ணே சகுனிமாமா
காப்பாற்றினாலும் நீயே
கரைசேர்த்தாலும், நீயே சகுனிமாமா

நீலிபழிக்க நான்
நிலைத்திருந்தேனே சகுனிமாமா
நினைக்கநினைக்கமனம்—
நெருப்பா யெரியுதே சகுனிமாமா.

உமது பாததூளியைக் கொடுங்கள். கண்களில் ஒத்திக் கொள்கிறேன். கௌரவர்களின் ஜயக்கொடியை இன்றே நாட்டினீர். ராஜசூயயாகத்தில் இப்பாண்டவர்கள் எனக்கிழைத்த அவமானங்களுக்கெல்லாம் பழிக்குப்பழி வாங்கியாய்விட்டது!

சகுனி. கடன் தீரப்போகிறது. கௌரவேசா! நீ திருப்தியடைந் தாய்! நானுந் திருப்தி யடைந்தேன்.

துர்யோ. யுதிஷ்டிரா! உங்களுக்கு உயர்ந்த ஆஸனம் வேறு? அடிமைகளுக்குரிய அடக்க ஒடுக்கத்துடன் நில்லுங்கள் ஐவரும் அப்படி.

யுதிஷ். தம்பீ! மறந்தேன், மன்னிப்பாய்.

பீமன். அண்ணா,

யுதிஷ். பீமா, அர்ஜுனா, நகுலா, சகதேவா,—. ராஜ சின்னங்களுக்கு இனி நாம் அர்ஹரல்ல. அகற்றுங்கள் இக்கணமே.

பீமன். துர்யோதனா! சகுனி கையிலிருக்கும் மாயப் பகடையால் வெற்றி பெற்றோமென அற்ப சந்தோஷத்தால் மதியிழந்தாய். என்கையிலிருக்கும் கதை மாயையல்ல. உன் வஞ்சகமாயை இருளைப் போக்கி உண்மையை விளக்க வல்ல உண்மை ஒளியே.

யு. பீமா! பதட்டமான வார்த்தைகளை ஏன் கொட்டுகிறாய்? சுத்த க்ஷத்திரியர் ஸத்யத்திற்குக் கட்டுப் படவேண்டும்.

பீ. அண்ணா! ஸத்யமோ, அஸத்யமோ, நான் தங்களுக்கு அடிமையே யொழிய வேறெவர்களுக்குமல்ல.

து. என் அடிமைக்கு அடிமை.

யு. பீமா! நீ என் சொல்லுக் கடங்கி யிருப்பாயென்பது ஸத்யமாகில் பொறுமையுடன் பேசாதிரு.

து. எங்கே அந்தத் திரௌபதி? பிரதிகாமி! போய் அவளையும் இக்கொலுமண்டபத்திற்கு அழைத்து வா.

(பிரதிகாமி போகிறான்.)

பீ. அண்ணா! இதையுமா பார்த்துப் பொறுக்கச் சொல்லுகிறீர்கள்?

யு. ஆம். எல்லாம் விதியின் செயல்.

திருதராஷ்டிரன் அக்கிரமம் அளவு கடந்து விட்டது. சஞ்சயா! என்னைப் பிடித்து அழைத்துச் செல். இனிமேலும் நான் இங்கே யிருப்பது ஸாத்தியமில்லை. நானோ பிறவிக் குருடன்,

குல லக்ஷ்மிக்கு நேரும் அவமானத்தைப் பார்க்கமுடியாது தான். ஆயினும் அவள் அபயக் குரலைக் காதுகளால் கேட்கச் சகியேன். சஞ்சயா! கையைப் பிடித்துக்கொள். என் மக்கள் பிதுர்த்துரோகிகளாகி விட்டனர். வெளியே அழைத்துச் செல் என்னை.

(சஞ்சயனுடன் போகிருன்)

(பிரதிகாமி—பிரவேசம்)

பிரதிகாமி ப்ரபோ! தேவி சொல்லச் சொன்னுர்கள்—தர்மராஜர் தவிர்த்த மற்றெவர்க்கும் தான் அடிமை யல்லவாம். தர்மராஜர் கட்டளையில்லாமல் கொலுமண்டபம் வர மாட்டார்களாம். தர்மராஜர் தன்னைத் தோற்ற பிறகு தேவியைத் தோற்ருரா, தேவியைத் தோற்ற பிறகு தன்னைத்தோற்ருரா, என்று தெரிய வேண்டுமாம் முதலில்.

துர்யோ. அடிமை தாஸிக்கு நியாய வாதம் வேரு ?........விகர்ண, இக்கணமே சென்று அந்தத்துரஹங்காரியைப் பிடித்திழுத்து வா.

விகர்ணன். அண்ணு! சித்தஸ்வாதீனத்தை இழந்து விட்டீர்களா ? பீஷ்மர், துரோணர், கர்ணன், முதலியோர் யாவரும் உயிருடன் தான் உட்கார்ந்திருக்கிருர்களா ?

விருத்தம்—ஆரபி

குலவிளக்காகிய சோதில் சேர்தியை
நலமிக ஐவர்க்கும் உரிய நங்கையை
இலகுறப் பணயமாய் இயைத்திங்காடிட
இலை இலை உரிமை இவ் வொருவற்கு என்றுமே

அண்ணு அந்தப் பரதகுல தீபத்தைப் பந்தயம் வைத்துத் தோற்க இந்த யுதிஷ்டிரருக்குத் தான் என்ன அதிகாரம் ?

துரோணர். விகர்ண! நன்ருய்க் கேட்டாய்! மகாபுத்திமான் நீ.

பீஷ்மர். நியாயமே கேட்டான்.

துச்சாதனன். ஏன் அதிகார மில்லை யுதிஷ்டிரருக்கு ?

விகர்ணன். திரௌபதி யுதிஷ்டிரர் ஒருவர் சொத்து அல்ல. ஐவர்க்கும் உரியவள். அப்படியிருக்க மற்றவர் நால்வர் சம்மதியுமின்றி, சித்தங்கலங்கிய யுதிஷ்டிரர் செய்யத் தகாத காரியம் செய்வாராயின் எப்படி அது சட்டப் படிச் செல்லத் தக்கதாகும் ?

துர்யோ. அடே, அதிகப்ரஸங்கி. என் உத்திரவுப்படி நடக்கப் போகிறுயா இல்லையா ?

விகர்ணன். முடியாது.

து. நீ என் தம்பி என்பதை மறந்தாயோ ?

வி. நான் உன் தம்பியாய்ப் பிறந்தது என் துரதிர்ஷ்டமே !

து. சீ, மூர்க்கா! போ வெளியே, என் கோபம் பொங்கி யெழுந்து உன் சிரத்தைத் துண்டிக்கு முன்.

வி. இதோ போகிறேன். இனி உன் முகத்தில் விழித்தலும் பிசகு.

(போகிறுன்)

து. துச்சாதனு! இழுத்து வா சட்டம் படிக்கும் அப்பொது மகளை !

பீஷ்மர்.
துரோணர். } நாராயண ! நாராயண !

(காதைப் பொத்திக் கொள்ளுகிறுர்கள்).

துச்சா. நியாயமா பேசுகிறுள் அவள் ?. இதோ கூந்தலைப் பிடித்து, மானங்குலைய அப்பொது மகளை இச்சபைக்கு இழுத்து வந்து நிறுத்துகிறேன் அவள் புருஷர்கள் முன்னிலையில்.

அர்ஜு. அண்ணு! கேட்டீர்களா அப்பாதகன் கொடு மொழிகளை?

யுதிஷ். அர்ஜுனு, பொறு, பொறு.

துரோணர். பீஷ்மரே, இந்தச் சபையில் நாம் இனியுமா இருப்பது ?

துர்யோ. எவரும் இச்சபையை விட்டு அகலக் கூடாது. என் கட்டளை. செல்வோர் எனக்குத் துரோகியாவர்.

பீ. பரத வம்ச ஜோதி, கௌரவ குலத்தை எரிக்கப்போகிறது. எனினும், கிருதக்ஞையால் கட்டுண்ட நாம் நம் கடமையைச் செய்து தானே தீர வேண்டும்.

பிலஹரி—விருத்தம்

அல்லில் பானு வொடுங்கியது போல்
வல்லிக் கொடியாள் கயவர் தம்முன்னே
செல்லல் கண்டவள் துய்மை நையவோ
மல்லரு பாண்ட வரைவருமடிமையாய்க்
கல்லென நின்று கலங்கிட விதியோ.

பீமன். பேதைப் பெண் ஒருத்தியைப் பேரவையில் கொணர்ந்து பரிஹசித்துப் பேசி அவமானப் படுத்த எண்ணங் கொண்ட ஆண்மையற்ற பேடிப் பதர்களை இன்னுமா சும்மா விட்டிருப்பது?. அண்ணா, எங்கள் தன தான்ய ராஜ்யமாதி சகலத்தையும் தோற்று, எங்களையும் அடிமையாக்கி நீரும் அடிமையாகி, இந்தத் திரௌபதியையும் பந்தயம் வைத்து தோற்ற காலத்தில் எல்லாம் உள்ளிற் பொங்கியெழுந்த கோபத்தீயை அடக்கி வைத்திருந்தேன்! இனித்தாளேன்! தாளேன் இவ்வநியாயத்தை! இவ்வளவிற்கும் ஆதி காரணம் நீரே. பிறர் கண்ணிற் படாதிருந்த இப்பாஞ்சாலியை அந்த துஷ்ட துச்சாசன மிருகம் தீண்டி அவமானப் படுத்துவதற்கு ஹேதுவான சூதாட்டத்தை எந்தக் கைகளால் ஆடினீரோ, அந்தக் கரங்களை, இக்ஷணமே தீக்கிரையாக்கித் திருப்தி யடைவேன். ஸகதேவா, கொண்டு வா நெருப்புத்தணல்களை இப்பொழுது.

அ. பீமண்ணா! என்ன வார்த்தைகளைக் கூறினீர்? யாரைப் பார்த்து இம்மொழிகள் கூறினீர்?. தர்ம ஸ்வரூபியான நம் முத்தண்ணாவை நோக்கி பாண்டவ குல வீரனை தாங்கள் சொல்லக் கூடிய வார்த்தைகளா இப்பொழுது தங்கள் வாயினின்றும் வெளி வந்தவை? அண்ணா!

யமன் கல்யாணி—ஆதி

கோபம் தாபம் கொடிதினும் கொடிதே
மீள்வதும் அரிதரிதே—பொல்லா (கோ)

பாபரஹிதராய் பரம தயாளுவாய்
பரமனை நிகர்க்கும் நம், தமயனுரை மீறி (கோ)

உயிருடன் நாமிங்கு உள்ளளவும் அண்ணல்
உறை பொய்யனென்ற உரை எழலாமோ (கோ)

கோபத்தீயும் பகைவர் கொடுமையும் உமது ஸ்வய புத்தியையும், தர்ம சிந்தனையையும், நீதி நெறி முறைகளை யும் சூன்யமாக்கி விட்டனவா? விரோதிகளின் எண் ணத்தையல்லவா நீங்களே சாதிக்கப் பார்க்கிறீர்! பாண்டவருமா எக்காரணத்தாலேனும் பிராதுர்த்ரோ ஹியும் அதர்மசாலிகளும் ஆகுபவர்? முத்தண்ணாவின் பொறுமையாலல்லவா நம் குல விளக்கு அணையாது விளங்கி வருகின்றது! கோபத்தை விடு. பொறுமையை மேற் கொள்ளும்.

(பீமன் தலை குனிந்து நிற்கிறான்).

[திரௌபதியைக் கூந்தலைப் பிடித்து அலங்கோல மாய் இழுத்து வருகிறான் துச்சாதனன். யாவரும் பயத்தினாலும் துக்கத்தினாலும் வாய் விட்டலறித் திகைத்திருக்கின்றனர்.]

துச்சா. அடி நீலி, நியாயமா பேசுகிறாய்? வா சபைக்கு நியாயம் தீர்ப்போம்.

திரௌ ஐயையோ, கூந்தல் குலைய மனங்குலைய என்னை இச் சபைக்கு இழுத்து வந்து அவமானப் படுத்தும் இவ் வதமனைக் கண்டிப்பாரில்லையா?.

கேதார கௌளம்—ரூபகம்

ஆண்மைக்கழகிதாகுமோ ஐயோ, அதம உன்செயல் (ஆ)
கேள்வியில்லையோ, கிளரும் சபையில்
ஆளிலா மங்கையோ ஆண்டவரே இது (ஆ)

என்னைச் சபையில் இழுத்து நிறுத்தி
சொன்னதும் செய்ததும் கண்டு துடித்தீரே
என்னையார் துயர் ஏழை பொறுத்திலேன்
மன்னவர் மங்கையர் மாண்கெடக் காண்பரோ (ஆ)

துர்யோ. அடி தாஸீ! இதுவும் துருபதன் ஜோடித்த ஸ்வயம்வர மண்டபமல்ல உன்னிஷ்டப்படிப் பிதற்ற. நீ என் அடிமை. என் சொற்படி நடக்கவேண்டியவள். அதோ பார் உன் ஐந்து புருஷர்களும் என் கீழ் அடிமை பூண்டு நிற்பதை.

கர்ணன். பாஞ்சாலி! அன்று அரச சபையில் உன் அண்ணன் ஏற்படுத்திய பந்தயத்தை நான் வென்று உன்னை

ஹஸ்தினபுரி அரசியாக்குவேனென்று கூறிய மொழிகளை அவமதித்துப் பரிகசித்தனையே. அன்று உன்னையடைந்த த்விஜ சிரேஷ்டன் உன்னை எந்த ஸ்திதிக்கு ஆளாக்கிவாளாயிருக்கிறான் பார்த்தனையா? ஓர் அரசனுக்கு பனைவியாக பறுத்த உன்னை, உயிருக்கஞ்சி பிராமணக்கோலத்தில் அலைந்து திரிந்த த்விஜன், உன்னைத் தன்னுடன் இதர நான்கு த்விஜசிரேஷ்டர்களும் அநுபவிக்க ஆளாக்கி, முடிவில் இச்சபையில் கொண்டுவந்து நிறுத்தி விட்டானே. போதுமா உன் குல கர்வத்திற் கேற்ற பிராயச் சித்தம்?

து. சபாஷ்! கர்ணா, சபாஷ், சபாஷ்! நன்றாய்ப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டாய். சொல்லுக்குச் சொல் சொல்லிக்காட்டி இச்சிறுக்கியின் செருக்கினை அடக்கினை. சபாஷ்!

அ. மோஹனம்—விருத்தம்.

சூதன் மகனே சுருக்குக உன் நாவை இனி
ஏதம் பெரிதாம், எனது கடுங் கோபமெனும்
வீசும் கொடிய விட அரவைக் கட்டியுள
பாசம் அறுந்து பருகிடும் நும் ஆவியையே.

அடே அதமகுலத்துதித்த அதிரதன் மகனே! அடக்கிவை உன் நாவை. திரும்பவும் வெளி விடுவையேல், நொடிக்கு நொடி துடித்துத் தவித்து வெளிக்கிளம்ப யத்தினிக்கும் எனது வீர வைர ஆக்ரோஷமாம் கால ஸர்ப்பத்தைக் கட்டியடக்கிவைத்திருக்கும் ஸத்யமென்னும் பாசமும் அற்று விடும். நீயும், பிறர் கைபார்த்துப் பிழைத்து வரும் உன் பக்கலிலிருக்கும் அப்பேடிப் பதரும் இவ்விடமே, இக்கணமே, என் கணைகளுக்கு இரையாகிக் கௌரவ குலமே இன்றுடன் அற்றுப் போகும், அறிவை.

து. அரவக் கொடியோன் நானடா. குரங்குக் கொடியோனே! கால ஸர்ப்பம் நானே.

நகுலன். உன் செய்கையே விளக்குகையில் சொல்லிக்கொள்ளவும் வேண்டுமா?

அ. குரங்குப் பிடி, ஞாபகமிருக்கட்டும். ஸர்ப்பமாயினும், குரங்கின் கையில் அகப்படுமாகில், உயிரிழந்து அழுகும் பரியந்தம் விடப்படாது, ஞாபகமிருக்கட்டும்.

து. செயலற்றுப்பிதற்றிக்கொண்டு நிற்கும் அவ்வடிமைகளது ஆத்ம திருப்தியைக் கெடுப்பானேன். திரௌபதீ! கண்ணீர் வேறு நீ கொட்ட கேட்டிற்கு? நீலிக்குக் கண்ணீர் நிமையிலேதானே. ராஜசூயயாகத்தில் மயன் நிர்மித்த மாளிகையில் என்னைக் கண்டு சிரித்தனையே, அதெல்லாம் ஒய்ந்து அழுகையாய் மாறிவிட்டதா? அதிகமாய்ச்சிரித்தால் அழும்படி நேரிடுமென்ற பழமொழி பலிதமாயிற்று? ஹஸ்தினபுரி அரசியாக மறுத்துப் பொது மகளாகச் சம்மதித்த நீ இப்பொழுது என் தாஸியாகி நிற்கின்றனை, பார்த்தனையா உன் விதியை?.

தி. விதியின் கதி போகப் போக அல்லவா தெரியவரும். குலமகள் கண்ணீர் வீண் போகாது. இத்துடனாவது செய்த பிழைகளையறிந்து நேர் வழி நடந்தால் பிழைக்கலாம். இல்லையேல் அழிவுதான்.

துச்சா. திரும்பவுமா பேசுகிறாய்! அடிமை தாஸிக்கு வீரப் பேச்சு வேறு?

து. ஹா! ஹா! இன்னமும் வாய்ப் பதட்டும் அடங்கவில்லையா?. துச்சாதனா! நான் ரமிக்க வேண்டும். அத்தாஸி, என் துடைகளில் வந்து உட்காரட்டும்.

சபையோர். ஹா!

(என்றலறி அடங்குகின்றனர்).

பீ. அண்ணா! இனித் தாளேன்.

(கதையை ஓங்குகிறான்.)

அ. அண்ணா! இதோ அழிந்தது கௌரவ குலம்.

(காண்டீபத்தை எடுக்கிறான்).

நகுலன். அண்ணா, இன்னமுமா நாம் சும்மா இருப்பது?

சகதே. பொறுத்தல் தகாது! இனிப் பொறுத்தல் தகாது!

யுதிஷ். பீமா, அர்ஜுனா, நகுலா, சகதேவா—. பொறுத்தார் பூமியாள்வார். அவரவர் வினைப் புயனை அவரவர் அனுபவித்தே தீரவேண்டும். நீங்கள் என் ஆக்ஞையை மீறாது, உங்கள் தர்ம நெறியைக் கடைப் பிடித்து நிற்க வேண்டிய தருணம் இதுவே,

பீ. பொறுமை, பொறுமை!

(கதையை எதிரிய நகுலன் எடுத்து வைக்கிறான்).

பூமி, ஆகாச, சூர்ய, சந்திராதி யனைவரும் அறிய இதோ பிரதிக்ஞை செய்கிறேன். இதே கதையைக் கொண்டு காலம் வரும்பொழுது எங்கள் குல லக்ஷ்மியை எந்தத் துடைமீது இருத்தி ரமிக்க நினைத்தனனோ, அந்த அதமன், துராத்மா, அந்த துர்யோதனப் பதரின் துடைகளைச் சுக்கல் சுக்கலாகச் செய்வேன் நான்.— குல நாரியைக் கொஞ்சமுங் கூச்சமில்லாமல் கூந்தலைப் பிடித்திழுத்து எந்த மிருகம் அலங்கோலப் படுத்தியதோ, அந்தத் துச்சாதன மிருகத்தின் மார்பைப் பிளந்து அதினின்றும் பெருகும் சூடான ரத்தத்தை ஆனந்தமாய்ப் பருகும் வரை, இந்தப் பீமன் கைகளினால் நீரும் அருந்தான் அறிவீர்.

த்ரௌ. ஹே தேவதைகளே! தெய்வங்களே!

காபி—விருத்தம்.

அரசவையில் எனை ஏற்றி அஞ்சாமல்
துகில் தீண்டி அளகம் தீண்டி
விரைசெயனி இனம்படிதார் வேந்தர் எதிர்
தகாதெனவே விளம்புவோரை
பொரு சமரின் முடிதுணித்து புலால்
நாறு வெங்குருதி பொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்த
குழல் இனி எடுத்து முடியேன் யானே.

வீரகேசரி பீம ராஜன் என்று இம்மிருகத்தின் மார்பைப் பிளந்து உதிரத்தை வெளியாக்குகிறாரோ அன்றே, அவ்விரத்தத்தைக் கொண்டே என் கூந்தலை வாரி முடியும்வரை அவிழ்ந்த இக்கூந்தலை முடிவதில்லை.

துச்சா. சபாஷ்! அவிழ்ந்த கூந்தலை முடியாது, பேயராய் ஆடு. அது தான் சரி.

அ. கௌரவரை ஒழிக்க என் அண்ணன் கொண்ட சபதத்தை நிறைவேற்றுவிக்க உதவுவதுடன், நான் இதுகாறும் சுத்த வீரனென்று எண்ணி வந்த அந்தச் சூத புத்ர கர்ணனை, உரிய காலத்தில் என் கூரியகணைகளுக்கு

இரையாக்காது விடுவேனாகில், நான் கைப்பிடித்தது காண்டீபமல்ல, அறிவீர்.

நகுல நாங்களும் துர்யோதனனையும் அந்தச் சகுனியையும்

ஸகதே. ஒழித்தே மறு காரியம் பார்ப்போம்.

து. பேஷ்! உங்கள் சப்த ஆடம்பரம் கேட்பதற்கு ஸ்வாரஸ்யமாகவே இருக்கிறது. .... துச்சாதனா, துடுக்கு மிக்க அச்சிறுக்கியின் வஸ்திரத்தை யகற்றி செருக்கினைப் போக்கு.

துச்சா. இதோ முடித்தேன் தங்கள் கட்டளையை.

பீஷ்ம. நாராயண, நாராயண !

துரோ.

(கண்களையும் காதுகளையும் பொத்திக் கொள்ளுகின்றனர்).

திரௌபதி. ஐயையோ! வீரர்களும் பெரியோர்களும் நிறைந்த இச்சபையில் இவ்வநீதத்திற்குக் கேள்விமுறை கிடையாதா? பீஷ்ம தேவா! துரோணாச்சாரியாரே! பெரியோர்களே !

அசாவேரி—ரூபகம்.

வாய் திறந்தொரு வார்த்தை சொல்லலாகாதோ
பெரியோரே நீர் (வாய்)
பேயினுங் கொடும்பேயாம் இவன் செய் தீயன கண்டும்
திகைத்திருப்பீர் (வாய்)

வாய்திறந்தொரு வார்த்தை சொல்லலாகாதா நீங்களாயினும். இத்தகைய அடாத காரியத்தை அனுமதிக்கும் சாஸ்திரமும் உளதோ! உங்களுக்கும் சம்மதமோ!

(பாட்டுத் தொடர்ச்சி)

அரசருள்ளீர் இவன் செய்திடும் அநியாயமும் அடுக்குமோ
முரசுயர்த்தோன் முதலாம் என் முதல்வரும் இங்கு அயர்ந்தனரோ
அரசவையில் ஒரு பேதையை அழவைப்பதும் ஆண்மையதோ
பரசினும் நான் பயனில்லையோ பார்த்திருப்பீர் கண்ணெதிரே (வாய்)

என் திக்விஜய புருஷர்களும் சும்மா இருக்கிறார்களே! நான் பாண்டவ பட்டமகிஷியல்லவா? குலஸ்திரீ என் பதுவும் பொய்யோ? தர்ம ராஜா! தங்கள் அடிமையாம் என்னைக் காத்து ரக்ஷிக்க வேண்டியது உமது கடமையல்லவா?........பீம ராஜனே! ஏன் தலைகுனிந்து நிற்கிறீர்? ....அர்ஜுன தேவா! ஏன் மௌனம்?........இளைய வீரர்களே! ஏன் அசையாமல் இருக்கிறீர்கள்? இந்தச் சபையில் வீர புருஷர்கள் இல்லையா?. நான் அவமானப் படுவதையுமா ஸத்தியத்திற்குக் கட்டுப் பட்டோமென்று என் புருஷர்கள் பார்த்துக் கொண்டு சும்மாவிருக்கப் போகிறார்கள்?

துச்சா. வெட்கமென்னடி நீலி?

(துகிலையுரிகிறான்).

சீ, வேசி! மார்பிலும் இடுப்பிலும் வைத்திருக்கும் கைகளை எடுக்கப்போகிறாயா? இல்லாவிட்டால் நானே வலுவில் இழுத்தெறியட்டுமா?.

பீஷ்மா. நாராயண! நாராயண!......சபையோர்களே! இதோ சொல்லுகிறேன் கேளுங்கள். இந்தக் கற்புக்கரசியின் கண்ணீரின் பிரவாகத்தில் அக்னி மலர் ஒன்று உண்டாகப் போகிறது. க்ஷத்திரியர்களெல்லோரும் அந்த நெருப்பில் ஈக்களைப்போல் விழுந்து மடியப் போகிறார்கள். கொடிய மகாயுத்தத்தில் பூமி நடுங்கும், அஷ்ட குலாசலங்களும் நடு நடுங்கும், திக் பாலர்களும் நடுக்குறுவர், மூவரும் தேவரும் நடு நடுங்குவர். பின்னர் வரப் போகும் அம்மகா நடுக்கத்தின் முற்கூறேயாகும் இப் பாண்டவ குல தீபத்தின் கண்ணீர்.

துர்யோ. பாட்டனாரே! போதும் உம் பிரஸங்கம். —துச்சாதனா! முடி காரியத்தை.

துச்சா. நாணம் வேறா உனக்கு? இதோ அடக்குகிறேன் பார் உன் கர்வத்தை முற்றிலும்.

திரௌபதி. என் மானத்தைக் காப்பவர் இங்கு எவருமிலர். ஹே கிருஷ்ண! துவாரகா வாஸ! பக்த வத்ஸல! பரம தயாள! அனாத ரக்ஷக! அடியார்க்கடிய! ஆபத் பந்தோ! ஆதிமூலமே யென்றோலமிட்டலறிய யானையை வந்து காத்த கருணாகர! நான் அனாதை. திக்கற்றவள். உன்னையே நம்பி இருகரமும் சிரமேற் கூப்பி ஓலமிடுகிறேன். என் மானத்தைக் காப்பாற்றுவாய். வா! வா!! வந்து கார்!!!

(இரு கரமும் சிரமேற்குவித்து ஓலமிடுகிறாள்)

[துச்சாதனன் துகிலுரியச் சேலைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. அந்தரத்தில் கிருஷ்ணன் பிரத்யக்ஷம். கௌரவரும் துச்சாதனனும் மூர்ச்சித்து விழ, பாண்டவரும் பீஷ்மத் துரோண கிருபாசாராதியோர் கிருஷ்ணனை வணங்கித் தோத்தரிக்கின்றனர்]

[திரை விழுகிறது]

அங்கம் 2 - களம் 7

காட்டில் ஓர் அழகிய பூஞ்சோலை

[யுதிஷ்டிரரும் பீமனும்]

பீமன். அண்ணா! துர்யோதனன் தன் சதுரங்க சேனைகளுடன் வனத்தில் வந்து இறங்கியிருக்கிறான் நம்மைக் கேலி செய்ய வேண்டுமென்றே எண்ணங் கொண்டு இங்கு வந்து ஆடம்பரத்தோடு துள்ளுகிறான். நரபதி! உத்திரவு கொடுங்கள். திரௌபதிக்கு நேர்ந்த அவமானத்தினால் என் நெஞ்சிலே பற்றியெரியும் பெருநெருப்பை இன்று தணித்துக் கொள்கிறேன்.

யுதிஷ்டி. பொறு. பீமசேனா! நான் சொல்வதைக்கேள். இன்னும் காலம் வரவில்லை.

[அர்ஜுனன், நகுலன், ஸகதேவன், பிரவேசம்]

அர்ஜு. அண்ணா! இதுவே தருணம். சிங்கக் குகையில் நுழையும் நரியைப் போலவும், தீயிற் சென்று விழும் விட்டில் பூச்சிகளைப் போலவும், கௌரவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக் கொண்டார்கள். கொடும் உத்திரவு. நொடியில் பழிக்குப் பழி தீர்த்துத் திரும்புகிறேன்.

யுதிஷ். தம்பி! தண்டனை செய்வது நாராயணனுடைய தொழில். காலம் வரும்போது அவனே அவர்களுக்குத் தகுந்த சிக்ஷை விதிப்பான்.

[திரௌபதி பிரவேசம்]

திரௌ. ஆபத்து! அநியாயம்! பெரிய விபத்து! கந்தர்வ ராஜன் சித்ரசேனன் ஹஸ்தினபுரி மன்னனைத் தோற்கடித்து அந்தப் புரஸ்திரீகள் அனைவரையும் அடிமைகளாகப் பிடித்துச் சென்றனனாம். கௌரவ ராணி பானுமதி, ஆதரவின்றிப் புலம்பி, நமது உதவி வேண்டுமென்று ரகஸ்யமாக ஒரு தூதனையும் அனுப்பியிருக்கிறாள்.

நகுலன். பாவம். துர்யோதனனுக்கு இப்படியா விபத்து நேரிட வேண்டும்! எங்கே அந்தத் தூதன் ?

திரௌ. வெளியே இருக்கிறான். அவனைச் சமாதானஞ் செய்வதற்கே வெகு பாடு பட்டு விட்டேன்.

ஸகதே. வேண்டும்! நன்றாக வேண்டும்! துர்யோதனனுக்கு நாராயணன் தகுந்த சிக்ஷை விதித்து விட்டான்.

யுதிஷ். அர்ஜுனா! என்ன செய்வது இப்பொழுது ?

அ. நான் என்ன சொல்வேன்? தங்கள் கட்டளையையே எதிர்பார்க்கிறேன்.

யு. பீமசேனா ?

பீ. துச்சாதனன் ரத்தத்தைக் குடிப்பதாக நான் விரதம் பூண்டிருக்கிறேனே. இப்போது சித்ரசேனன் அவனைக் கொன்று விட்டால் என் விரதத்திற்கல்லவா பங்கம் வந்து விடும்—.

யு. நகுலா ? ஸகதேவா ?

ந. பீமண்ணா கூறுவதும் நியாயமாகத்தான் காண்கிறது.

ஸ. தங்கள் இஷ்டமே எங்கள் இஷ்டமும்.

யு. பாஞ்சால நந்தினி! உன் யோசனை என்ன?

தி. நான் ஒரு பேதைப் பெண். தர்க்கமோ வாதமோ எனக்குத் தெரியாது. ராஜஸ்திரீகளைக் காப்பாற்றுங்கள்.

பீ. திரௌபதி! மறந்து விட்டாயா இதற்குள்? துர்யோதனன் உனக்குச் செய்த அவமானங்கள் வீண் போகவா?

தி, அரவக்கொடியோன் செய்த கொடுமையை நான்மறந்து விடவில்லை. ஆனால், நான் பட்ட அவமானத்திற்கு, நான் சகிக்கவேண்டி வந்த துன்பங்களுக்கு, உலகில் வேறெந்த ஸ்திரீயும்,— நம் விரோதிகளின் பெண்டுகளாயிருந்த போதிலும்,— ஆளாகக்கூடாதென்பதே எனது பிரார்த்தனை. நீங்கள் ஐந்து பேர்களும் சுத்த வீரர்கள். திக்கற்ற அந்த மங்கையின் கண்ணீரைப் போக்க உங்களுக்கு மனமில்லையா? எழுந்திருங்கள். அந்தக் கந்தர்வனுக்குத் தக்க தண்டனை விதியுங்கள். ஸ்திரீ ஜாதியின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்.

அ. பாஞ்சாலி! மெச்சினேன் உன்னை. தன்னுடைய சொந்த பந்துக்களின் கஷ்டத்தைப் பார்த்த பின்பும், பேசாமல் உதாசினமாக இருப்பவன், உயிர் வாழ்வதிலும் இறந்து போவதே மேல்! பானுமதி நமது சகோதரன் மனைவி. நாம் உயிரோடிருக்கும் பொழுது அந்த அதமன் கந்தர்வன், அவளை அவமானப் படுத்த விடுவதா? அண்ணா! உத்திரவு கொடுங்கள். என் கையிலிருப்பது காண்டீபம். அந்தக் கந்தர்வனுக்கு நல்ல புத்தி புகட்டுகிறேன்.

பீ. ஒரு விதத்தில் நியாயந்தான். கௌரவர்களும் பாண்டவர்களும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகள். கௌரவர்களின் சகோதரர்கள் பீமனும் அர்ஜுனனும் இன்னமும் உயிரோடு தான் இருக்கிறார்கள் என்பதை அந்தக் கந்தர்வன் உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டியது தான்.

யு. நீங்களே உண்மையான வீரர்கள்! உங்கள் தீர்மானத்தைக் கண்டு மகிழ்கிறேன். பார்த்தா! போய்வா, பீமா! நீயும்போய்வா! ராஜஸ்திரீகளையெல்லாம் ஜாக்கிரதையாகஅழைத்துக் கொண்டு வாருங்கள். பாஞ்சாலி!

உன்புனிதமான ஆசை பூர்த்தியாகி விட்டது. பயப் படாதே. அவர்களை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்.

தி. கோபாலா! அன்று ராஜசபையில் என் மானத்தைக் காப்பாற்றினாய். இன்று கௌரவ ஸ்திரீகளின் மானத் தையும் காப்பாற்றியருள்!

அங்கம் 3 - களம் 1

கர்ணன் மாளிகை

[கர்ணனும் இந்திரப் பிராமணனும் பேசிய வண்ணம்]

கர். பூசுரரே! கர்ணன் தன்னிடமிருக்கும் எதையும் யாவர் கேட்பினும் இல்லையென மறுக்கமாட்டான். தாராள மாய்க் கேளும்.

இந். உனது சரீரத்தில் ஜ்வலிக்கும் கவசமும், காதுகளில் துலங்கும் குண்டலங்களுமே நான் வேண்டுவது.

கர். ஹா! ஹா! பிராமணோத்தமரே! அவைகளால் உமக்கு என்ன ஆகப் போகிறது?

இந். அங்காதிப! எனக்குப் பிரயோசனமில்லாததையா நான் யாசிப்பேன்?

கர். வாஸ்தவமே. ஆயினும், தாம் கேட்பவை நான் பிறந்தது முதல் என் சரீரத்துடன் பிறந்தனவாயிற்றே. என் சரீ ரத்தைப் பிளந்து எடுத்தாலொழிய அவைகளை அகற்ற வொண்ணாதே! ஆகவே இவைகளைக் கேட்பதைவிட என் உயிரையே கேட்கின் சந்தோஷமாய்க் கொடுப்பேனே.

இந். கர்ண ராஜனே! கொடுப்பதற் கிஷ்டமில்லா விட்டால் முடியாதென்று சொல்லி விடுகிறது தானே. ஏன் இந்த வீண் கதையெல்லாம்.

[பரபரப்புடன் பத்மாவதி பிரவேசம்]

பிலஹரி—ஆதி

மோசம் மோசம் நம் குல நாசம்

மோசமே யிந்த முழுவடிவுடனே
மாசில் நம் உயிரினை மாய்க்க வந்த இது (மோ)

அரிய குண்டலமும் கவசமும் ஈதல்
தெரிய நல்லுயிரையே தருவது அலவோ (மோ)

ப. (திடுக்கிட்டு) ஹா! மோசம் போனேன். (பிராமணனை நோக்கி) நீயார்? எப்படி உள்ளே வந்தாய்? அரண்மனைக்கதவுகளெல்லாம் மூடியிருக்கையில், நீ எப்படி யுள்ளே நுழைந்தாய்?

க. பத்மா! இந்தப் பூசுரோத்தமரை அறிவாயா நீ?

ப. அறியேன். ஆயினும் காலனே வடிவெடுத்து இந்த பிராமண ரூபத்தில் வரப்போகிற தென்பதை முன்னறிந்தே எவரும் வரக்கூடாதபடி அரண்மனைக்கதவுகளைத் தாளிட்டு ஜாக்ரதை செய்து வந்தேனே! நாதா! இவன் உண்மையில் தானம் பெறவேண்டுமென்று வந்த பிராமணனல்ல. யமன்! யமன்! காலனே இவ்வுருவெடுத்து மோச எண்ணத்துடன் வந்திருக்கிறன்.

க. காலனுயிருந்தாலென்ன? வேறெவனுக இருந்தாலென்ன? என் உயிரையே கவர்ந்து செல்ல இவ்வுருவம் வந்துளதாயினும், உயிர்க்குப் பயந்து விரதபங்க மிழைப்பவன் நானல்ல, என்பதை யறிந்து செல்லட்டும்! விப்ரசிரேஷ்டரே! இதோ சந்தோஷத்துடன் ஈந்தேன் தாம் விரும்பியதும் பிறப்பு முதல் என் சரீரத்துடன் இருந்து வந்தது மான என் கவசகுண்டலங்களை. மகிழ்வுடன் பெற்றுச் செல்வீர். வாரும் என்னுடன்.

ப. (கர்ணன் காலில் விழுந்து) நாதா! வேண்டாம், வேண்டாம்! இது ஸத்யமாய் யாசக போஷணையல்ல. இந்த வேஷதாரிக்கா தாங்கள் உயிரைக் கொடுக்கப் போகிறீர்கள்?

பி. ஹே—ஸதிமணி! உன் நாதன் உயிரைக் குறித்து அஞ்சாதே. இந்த கவசகுண்டலங்கள் சரீரத்தை விட்டு அகல்வதனல் அவன் உயிருக்கு எவ்வித ஹானியும் நேரிடாதபடி நான் இதோ ஆசீர்வாதம் செய்கிறேன். பிராம்மணவாக்கு என்றும் பொய்யாகாது. ஸத்யம். நம்பு.

க. இவர் ஆசீர்வாதம் எப்படியிருந்தபோதிலும், என் வாக்கு பொய்யாகக்கூடாது. என் உயிர் இருந்தாலும் போனாலும், நான் கொடுப்பதாகக்கூறிய கவசகுண்டலங்களை கொடுத்தே தீருவேன். என்னைத் தடுக்காதே. பிராமணோத்தமரே! வாரும்.

(கர்ணனும் பிராமணனும் போகிறார்கள்)

ப. ஹா, தெய்வமே! என் முன் ஜாக்ரதையெல்லாம் பயனற்றதாகிவிட்டதே! ஹே நியதீ! எப்பொழுது பார்த்தாலும் நிழல்போல் எம்மைத் தொடர்ந்து வருகிறாய்

பீம்ப்ளாஸ்—ஆதி

கொடியை நீ மிகவுமே.

உரிய நாதனை ஓங்க விடாதாய்
உனையே தென்டேன் உனதுவலியே (கொ)

எதுவரினுமே இல்லென அறியா
ஜோதிமணியை துயரே செய்தாய் (கொ)

சில வேளைகளில் கருணை ததும்ப இஷ்ட தேவதையாக விளங்குகிறாய். சிலவேளைகளில் பயங்கரமான ராக்ஷஸியாகக் காண்கிறாய். உன்பாதத்தைப் பற்றுகிறேன். சொல்! என் அப்பா எங்களைத் தொடர்ந்து வருத்துகிறாய்?

[பிராமணனுடன் கர்ணன் திரும்பப் பிரவேசம்.]

க. (கவச குண்டலங்களை அவரிடங் கொடுத்து) ஸ்வாமி! பாக்யம்! தாங்கள் விடைபெற்றுக் கொள்ளலாம்.

இந்தி பி. சந்தோஷம்.

(பிராமணன் கவச குண்டலங்களுடன் போகிறார்)

ப. (கவசங்கள் நீங்கிய உடலில் ரத்தத்தைக் கண்டு) ஹா, நாதா! தங்களுடன் பிறந்து பாதுகாப்பாயிருந்து வந்த கவச குண்டலங்களையும் தெய்வம் கழற்றியெடுத்துக் கொண்டு சென்று விட்டதே. என் மனத்துள் ஓர் வித பீதியுண்டாகிறதே.

க. கண்மணீ, என்ன பேதமை இது? சுத்தவீரன் மனைவியாகிய நீயுமா இப்படிக் கலங்குவது? வருவன வந்தே தீரும். வருந்துதலொழி. எந்த நியதியைக் குறித்து நீ வருந்துகிருயோ அந்த நியதியின் பந்தங்களை என் வாளினுல் காலம் வரும்பொழுது அறுத்தெறிந்து விடுகிறேன் பார். கண்ணே! நீ போய் எனக்கு வேறு கவசங்களையும் ஆயுதங்களையும் உடனே தயார் செய்.

ப. நாதா! தாம் கூறுவது வாஸ்தவமே. என்பேதமையால் தங்கள் தீர மனத்திற்கு அதைர்ய முண்டாக்கக் கூடாது தான். தங்கள் உத்திரவுப்படியே தங்களுக்கு வேண்டிய கவச ஆயுதங்களைச் சித்தம் செய்யச் செல்கிறேன்.

க. அதுதான் சரி. கண்ணே! நீயே ஸதிமணி.

ப. நாதா! நான் போய் வருகிறேன்.

(விடை பெற்றுச் செல்கிருள்)

[திரை விழுகிறது]

அங்கம் 3 - களம் 2

கிருஷ்ணன் விடுதி

[கிருஷ்ணன் மஞ்சத்தில் சயனித்துச் சிந்தித்த வண்ணம்]

கிருஷ். (தனிமை). வரும் யுத்தத்தில் நான் ஆயுதம் தொடுவதில்லையென வாக்குக் கொடுத்து விட்டேன் கௌரவர்களுக்கு. அர்ஜுனனோ கர்ணனைக் கொல்லச் சபதஞ் செய்திருக்கிருன். கர்ணனையோ அவன் செய்த தர்மங்கள் தலைகாக்கும்! அர்ஜுனன் தனியாக நின்று கர்ணனைக் கொல்வது ஆகாத காரியம். கர்ணனும் பாண்டவர்கள் மீது வீரவைரங் கொண்டுளான். பாண்டவர் அழிய நேரிடுமாயின் இப்பாரதயுத்தத்தின் நோக்கமே அடியோடு சிதைந்து விடுமே. இதற்கென்ன செய்யலாம்?

[சிந்தனையிலாழ்கிருர்—குந்திதேவி பிரவேசம்]

அம்மா, நீ ஏன் இங்கு வந்தாய்? ஏன் உன் உடல் இப்படி நடுங்குகிறது?

குந்தி. கிருஷ்ணா! யாவுமறிந்தும் ஏதுமறியாதவன் போல் நடிப்பதில் நீ வெகு சமர்த்தன். அப்பனே! போர் தொடங்கப் போகிறதாமே! யுத்தத்தில், ஒரே தாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் ஒருவரை யொருவர் கொலை செய்யும் கோரக்ருத்யத்தைக் கண்டு அவர்களின் தாயாகிய நான் எப்படிச் சகித்திருப்பேன்?

கி. அம்மா! இது வரை உன்னையும் என்னையும் தவிர்த்த எவருமறியாத பரமரகஸ்யத்தைப் பேதமையால் இச் சமயம் வெளியிட்டுப் பாரதயுத்தத்தின் போக்கைக் கெடுக்க வேண்டாம். தர்மராஜ்யஸ்தாபனம் வீண் கனவாய் விடும்.

கு. வாஸ்தவமே. ஆயினும்; கர்ணனே மகாவீரன். மூத்தோனும் அவன் கையில் என் இதர ஐந்து பிள்ளைகளையும் பறி கொடுப்பதா?

கி. அம்மணீ! தாங்கள் அத்தகைய பீதி எதுவுங்கொள்ள வேண்டாம். அர்ஜுனனைக் கொல்ல இந்தக் கர்ணனாலு மாகாது, வேறெவராலுமாகாது.

கு. அர்ஜுனனைக் கர்ணன் கொல்லானென்றால் கர்ணனை அர்ஜுனன் கொன்றாக வேண்டு மல்லவா!

கி. தாயே! வீண் சங்கடத்திற்கு ஆளாக்காதீர்கள் என்னை. போகட்டும், தாங்கள் கர்ணனைத் தாயின் அன்புடன் வளர்த்து வந்தீர்களா• இது காறும்? அப்படிக்கில்லாதிருக்க, இப்பொழுது ஏன் இந்த இரக்கம் உமக்கு அவன் மீது?

கு. ஹே பகவன்! என்னைச் சோதிக்கின்றனையோ? அவனை இதுவரை நான் மறந்ததே கிடையாதே. அன்று, விற்போட்டியன்று அவனைக் கண்ணாரக்கண்டது முதல், தாயின் அன்பு தனயன் சிறப்பின் காரணமாய் பூண்டு வளர்ந்ததே.

கி. அம்மா! வீணில் வருந்தி என்ன பயன்? ஆயினும், இந்தச் சங்கடத்தினின்றும் விடுபடும் வழி ஒன்றே தானிருக்கின்றது.

கு. என்ன? என்ன? கூறு, கூறு?

கி. கர்ணனை இந்த யுத்தத்தினின்றும் விலகிக் கொள்ளும்படிச் செய்வீர்களானல்...........

கு. ஐயோ! அது முடியக்கூடிய காரியமா?

கி. கஷ்டமான காரியந்தான். ஆயினும், முயன்று பாரும் அவனை நேரிற்கண்டு.

கு. ஸர்வாந்தர்யாமி! எனது அபராதத்தின் பலனை நான் அனுபவிக்கத்தானே வேண்டும். லஜ்ஜையை விடத்தான் வேண்டும் நான். எனது குற்றத்தைக் கர்ணனிடந் தெரிவித்து அவன் மன்னிப்பைக் கேட்டுத் தயையை உண்டாக்குகிறேன் அவன் மனத்துள். தாயின் மனத்தைப் புண்படுத்தலாகாதென, அவன் பாண்டவர்மீது கொண்ட த்வேஷத்தை விட்டிடக்கூடும். ஆயினும் நான் அவனை எங்கே சந்தித்துப்பேசுவது?

கி. தினே தினே நடுமத்யான காலத்தில் சூர்ய நமஸ்காரார்த்தம் தனித்து யமுனைக் கரைக்குப் போகிறுன் அவன். நாளை மத்யானம் அங்கே அவனைத் தனிமையிற் சந்தித்து யுதிஷ்டிரருடன சமாதானஞ் செய்து கொள்ளும்படி கேளுங்கள். தாயென்றறிந்த பின்னர் தங்கள் வார்த்தைகளை அவமதியானென்றே எண்ணுகிறேன்.

கு. உன் ஆசிர்வாதமிருந்தால் எல்லாம் எங்களுக்கு அனுகூலமாகவே நடக்கும். உன்னை நம்பியே நாங்கள் இதுவரை பிழைத்து வந்தோம். இனியும் எங்களைக் காப்பது உன் கடமையே.

(குந்தி போகிருள்)

கி. (தனிமை) உம்—உம்:—குந்தி! இந்த அபிமானமும் இந்த அன்புந்தான் கர்ணனுடைய அழிவுக்குக் காரணமாயிருக்கப் போகிறது. எதைக்குறித்து நான் சிந்தைப் பட்டுக் கொண்டிருந்தேனே, அந்தச் சிந்தனையை நீ போக்கினுய். இனி நான் செய்யவேண்டியது ஒரே வேலை தான் பாக்கி.

(போகிருர்)

[திரை விழுகிறது]

அங்கம் 3 - களம் 3.

யமுனைக் கரை

[கர்ணன் சூர்ய நமஸ்காரம் முடித்து ஸ்தோத்திரம் பண்ணுகிறான்]
[குந்தி பிரவேசம்]

ஸ்லோகம்—தர்பார்

யன்மண்டலம் ஞானமனந்தகம்யம்
த்ரைலோக்ய பூஜ்யம்த்ருகுணாத்ம ரூபம்
ஸமஸ்த்த தேஜோமய திவ்ய ரூபம்
புனாதுமாம் தத்ஸவிதுர் வரேண்யம்

க. (கண் விழித்து). தாயே, தாங்கள் யார்?

கு. குழந்தாய், என்னை அறிய மாட்டயா நீ?

க. அம்பா, அறியவில்லையே.

கு. எப்படியறிவாய்? ஆனால் அறியாமலேயே, முறையிட்டழைத்தாய்!......குழந்தாய் நான் தான் குந்தி.

க. குந்தி தேவியா!..................பஞ்சபாண்டவராம் வீர ஸிம்ஹங்களை ஈன்ற புண்யவதியா?

கு. ஆம் மகனே. நான் ஈன்றெடுத்தது ஐந்து ஸிம்ஹங்கள் மட்டுமல்ல. ஆறு ஸிம்ஹங்கள்! அந்த ஆருவது ஸிம்ஹத்தை நாடியே இங்கு வந்தேன்.

க. ஹா, ஹா! என் விரோதிகள் இவ்வைவர் மட்டுமல்லவா? அந்த என் ஆருவது விரோதி யாவன்?

கு. நீயே.

க. நல்ல வார்த்தை நீர் கூறியது! நானேதான் என் ஆருவது விரோதி! வாஸ்தவந்தான். ஆயினும் என் தாய் தாமல்லவே.

கு. அர்ஜுனனுக்கு இணையான வீரனை ஈன்றதாய், அர்ஜுனனை ஈன்ற தாயை விடப் பிறிதொருத்தியாயிருக்கக் கூடுமோ?

க. அம்மா! விளையாட்டுப் பேச்சுக்கு இது சமயமல்ல. தாம் வந்த காரியம் யாது?

கு. கர்ணா! நீயே என் மூத்தமகன்.

க. (திடுக்கிட்டு) என்ன! என்ன! உண்மையாகவேயா? ராதேயனல்லவோ நான்?

கு. உண்மையாகவே. ஸத்யமாகவே! நீ நித்தம் வழிபடும் அந்தக் கதிரவன் மீது ஆணையாகவே சொல்லுகிறேன்! நீயும் கௌந்தேயனே. நானே உன் தாய். அதோ ஸர்வவ்யாபியாய் விளங்கும் சூர்யநாராயணனே உன் தந்தை. நீயே என் முதல் மைந்தன்.

க. எப்படி? எப்படி?

கு. அப்பா! என் கன்னிப்பருவத்தில் ஒரு முனிவர் சில மந்திரங்களை எனக்கு உபதேசித்து எனக்கு இஷ்டமான வேளையில் எந்த மந்திரத்தை ஜபிக்கிறேனோ அதற்குரிய தேவன் என் முன் பிரஸன்னமாகிப் புத்ரப்பேறு தருவார் என்று ஆசீர்வதித்தார். முனிவர் சென்றதும், கன்னியாயிருந்த நான் அந்த மந்திரங்களின் மகிமையைப் பரிக்ஷிக்குமாறு, ஓர் ஜபத்தை ஜபிக்க, அதற்கு அதிஷ்டமான தேவதையான சூர்யபகவான் என் முன் தோன்ற அவரருளால் இக்கவசகுண்டலங்களுடன் நீ பிறந்தாய். என் கண்ணே! உலக நிந்தைக்குப் பயந்து, ஓர் தாம்பரப் பாத்திரத்தில் உன்னை வைத்துப் பாவி நான் கங்கையில் விட்டு விட்டேனடா! குழந்தாய்! மீளவும் உன்னை விற்போட்டி யன்று கண்டது முதல், உன்னைப்பார்த்து உன்வரலாற்றைத் தெரிவித்து; உன்னை, திரும்பி நான் பெறயத்தனித்தும், நீ கௌரவர் பக்கம் சேர்ந்த காரணமும், நான் உலக நிந்தனைக்குப் பயந்த லஜ்ஜையும், இதுவரை உன்னையணுக வொட்டாது செய்து விட்டதடா என்னை! மகாபாபியான என் செய்கையினால், நீ உன் தம்பிமார்களையே விரோதிக்கச் செய்து விட்டேனடா!

க. ஹா, ஹா! மத்யான சூர்யனும் ஒளி மழுங்குகிறான். கல்மனமாம் என் நெஞ்சமும் கரைகின்றது. உலகம் இருள் மூடி விட்டது. கண்கள் சுழல்கின்றன எனக்கும். தாங்கள் கூறிய அனைத்தும் உண்மையே தானா?

(விண்ணினின்றும் சூர்யமண்டலத்தில் சூர்யன் சற்று மேகத்துள் மறைந்து வெளிப்படுகிறான்)

வாஸ்தவமே தானே?

[சூர்யன் அசரீரயாய் "கர்ண, குந்தி கூறியயாவையும் உண்மையே." என்கிறார்]

ஹா! தந்தையே.

(சூர்யனை நமஸ்கரித்து)

அன்னையே

(குந்தியின் பாதங்களில் தாளிட்டு வணங்குகிறான். குந்தியும் அவனை எடுத்து அணைத்து உச்சி முகர்கிறாள்)

என்னை ஈன்றெடுத்த தாயே! யாவும் விசித்ரமாயிருக்கின்றனவே! நாடகத்தில் வரும் ஓர் கட்டுக்கதையைப் போலல்லவா இருக்கின்றன. உண்மையை அறியாது ஸம்ஸார அரண்யத்தில் ஓர் நரிக்குட்டிபோல் அலைந்தேனே. உலகத்தோரெல்லாராலும் இழிகுலத்தோனென ஏளனஞ் செய்யப்பட்டேனே. அவமானப் பொறுக்க முடியாது, அரவக்கொடியோனுக் கடிமை பூண்டேனே! அருமைத் தம்பிமார்களுக்கு ம்ருத்யுவானேனே.........
தாயே! நமது பாந்தவ்யமுறை இனி என்ன பயன் படப் போகிறது! ஐயோ! என் சித்தங் கலங்குகிறது. தாருமாறான விஷயங்கள் என் மனக்கண் முன் நடமாடுகின்றன! விதியின் செயல் விபரீதமானது.

கு. மைந்தா! இனியும் என்னை அகற்றுவையோ? என்னுடன் வாராயோ உன் தம்பிமார்களிடம்?

க. (குந்தியிடமிருந்து விடுவித்துக்கொண்டு) சுத்த வீரர்களைப் பெற்றெடுத்த க்ஷத்ரிய நந்தினியா இப்படிக் கூறியது (அருகிற்சென்று) அம்மா, ப்ரேமை மிகுதியால் அப்படிக் கூறினீர்போலும். நாம் இனிக் கூடியிருப்பது கூடாத காரிய மல்லவா?

கு. ஐயோ! வரும் யுத்தத்தில் சகோதரன் சகோதரனைக் கொல்லும் கோரக்காட்சியை எப்படிக் காண்பேனடா நான்? புத்ரசோகத்தை எப்படிப்பொறுப்பேனடா? அதைப் போக்கிக்கொள்ளவே யல்லவோ லஜ்ஜையையும் விடுத்து லோக அபவாதத்தையும் லக்ஷியஞ் செய்யாது உன்னிடம் வரத்துணிந்தேன். வேண்டாம்! ஒரே வேண்டுகோள். யுதிஷ்டிரனுடன் சமாதானஞ் செய்து

கொள்!..........இல்லையேல், எவ்விதத்தாலேனும் இந்த யுத்தத்திலிருந்து விலகிக்கொள். என் ஆறுமக்களும் உயிருடனிருக்கவேண்டுமென்பதே என் ஆசை.

க. அது முடியாதகாரியம்! அன்னையே! நான் கூறுவதைச் சற்றுச் செவிசாய்த்துக் கேட்பீராக! கடுஞ்சொற்கள் போலத்தோன்றினும் உண்மையை ஒளியாது உரைக்க வேண்டியிருக்கிறது. மன்னிப்பீராக!.........தாங்களே என்னை ஈன்ற தாயென்கிறீர்கள். ஆயினும், கங்கையில் என்னை மிதக்க விட்ட க்ஷணத்திலேயே என்மீது உங்களுக்குள்ள உரிமைகளை இழந்து விட்டீர்களல்லவா? அன்று முதல் உலகோரறிய என்னை வளர்த்த தாய் ராதை! பிறகு என் அவமானத்தைப்போக்கி அந்தஸ்தில் வைத்து அன்னமிட்டு உயிர்க்குயிராய் நேசித்து வந்த தாதா கௌரவேசன்! எங்களிருவரையும் பிணித்திருக்கும் ப்ரேமா பந்தத்தை அறுத்தெறிவது எவராலும் முடியாத காரியமாயிற்றே. இந்த விஷயம் தங்களுக்குத் தெரியதா?

கு. ஆயின் என்னைக் கதறித்தவிக்கவிடுதல் முறையோ? என் பிரார்த்தனை வீணாவதா?

க. என்வாழ்வு முழுவதும் வீணாயிற்றே.

கு. ஸத்யமூர்த்தியாம் கிருஷ்ணனுக்கும் ஸத்யத்திற்கடிமை பூண்டவனும் யுதிஷ்டிரனுக்கும் எதிராக நீ பாணம் தொடுப்பது நியாயமோ?

க. தாயே! தங்கள் மூத்த குமாரனும் நானும் ஸ்த்யத்திற் கடிமை பூண்டவனே. உண்ட வீட்டிற்கிரண்டகம் நினைப்பதழகாகுமோ? பீஷ்மத் த்ரோணாதியோர் கௌரவரைவிடப் பாண்டவரை அதிகமாகக் கொண்டாடி வந்தும், கௌரவர் பக்கம் சேர்ந்திருக்கவில்லையா? எஜமானத்ரோகம் மகாபாதகம். அந்தப் பாதகத்திற் காளாக்காதீர், என்னை ஈன்றெடுத்த தாய் தாமென்பது ஸத்யமாகில்.

கு ஐயோ, தெய்வமே! இந்தத் தர்மசங்கடத்திற்கு என் செய்வேன்? கிருஷ்ணா! இக்கணமே என்தலையில் இடி விழுந்து சாகக் கூடாதா நான்!

க. அம்மா வேண்டாம், வேண்டாம். நான் அதிர்ஷ்ட ஹீனன். துரதிரஷ்டமே என் வாழ்க்கைத்துணையா யிற்று. அன்னையின் அன்பை யறியாமலே என் வாழ்க்கை பூர்த்தியாகப்போகிறது. என் மனம் அலைகடல் துரும்புபோல் தத்தளித்துத் தவிக்கிறது. தங்கள் மன நிலையையும் நான் அறியாதவனல்ல. உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றவே நான் இதோ இந்த விரதம் பூணுகிறேன். வரும் யுத்தத்தில் அர்ஜுனனாவது மடிய வேண்டும், கர்ணனாவது சாகவேண்டும். அது நிச்சயம். ஆயினும், தங்கள் பொருட்டு ஒரு வாக்கு மட்டும் கொடுக்கிறேன். தர்மன், பீமன், நகுலன், ஸகதேவன் இந்நால்வரில் எவரும் யுத்தத்தில் கௌரவர் கைகளால் சாகாவண்ணம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆகவே தாங்கள் எக்காலும் பஞ்சபாண்டவர்களையே கொண்டவராவீர்.

கு. ஹே தயாள மூர்த்தி! மஹாவீரர்களாம் உங்களிருவரில் ஒருவரைப் பறிகொடுக்க எப்படியடா சம்மதிப்பேன்? அர்ஜுனனுடன் நீ யுத்தஞ்செய்யாது வேறெவரையாயினும் அனுப்புவதாக வாக்களிக்கமாட்டாயா?

க. அம்மா! மறுபடியும் ஆகாத காரியத்தைப்பேசி என்னை ஆத்மத்ரோகி யென்னும் பழிக்கு ஆளாக்க வேண்டாம். இருவர் துக்கமும் அதிகரிக்கிறதே தவிர வேறு பிரயோசன மில்லை.

கு. ஐயோ! இந்தச் சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்! குழந்தாய், எனக்கோர் வரமாவது அளிப்பாயா?

க. தாங்கள் கோரும் வரம் யாது? எதைக்கேட்கினும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

கு. மகனே! வரும் யுத்தத்தில் நீ வரப்ரஸாதத்தால் பெற்றுள்ள வாஸவாஸ்திரத்தை அர்ஜுனன் மீது ஒரு முறை தவறின் மறுமுறை பிரயோகிப்பதில்லை யென வாக்களிப்பாயா?

க. அம்மா! இதுவும் ஒரு வரமாகுமா? ஒரு முறை உபயோகித்துத் தவறிய அஸ்திரத்தைத் திரும்பவும் உபயோகிப்பது தனுர்சாஸ்திர முறையல்லவே. எனினும் தாங்கள் கேட்டபடியே வாக்களிக்கிறேன். வேறு ஏதாவது ஓர் வரம் கேளுமம்மா.

கு. இனி நான் கேட்பதற்கு என்ன இருக்கிறது? நான் கேளாமலேயேதான் நீ உன் நான்கு தம்பிமார்களையும் கொல்வதில்லையென் வாக்களித்து விட்டாயே.

க. என்னை ஈன்ற தாயே! எனக்கோர் வரமளிப்பீர்களா?

கு. கண்மணி! நான் உனக்களிக்கக் கூடிய வரமும் உளதோ? அப்படியிருக்குமாயின், அப்பனே, கேள் தருகிறேன்.

க. தாயே, என் ஜனன ரகஸ்யத்தை நான் இறக்குமளவும் எவர்க்கும் அறிவிக்கக்கூடாது.

கு. அப்படியே செய்வேனடா, என் செல்வமே.

க. ஒருகால் வருகிறபோரில்; நான் இறக்கநேரிட்டால், என் உடலைத்தாங்கள் கண்ணீரால் நீராட்டித் தம் வாயால் மகனே யென்றழைத்து, நான் சூதபுத்ரனென்ற வசைச் சொல்லைப் போக்கி, குந்தி மைந்தனும் க்ஷத்ரிய வீரனென்பதையும், பாண்டவருள் மூத்தோனென்பதையும் உலகோரறியத் தாங்களே தெரிவிக்க வேண்டுகிறேன்.

கு. என் உயிரே! நீ கேட்பதையும் மறுப்பேனோ?

க. அம்மா, தாம்வந்துவெகுநாழிகை யாகிறது. உம்மை விட்டுப் பிரிய மனம் வராவிடினும், பிறர் நம்மைக் கண்டால் பாரததேசத்தின் சரித்திரமே வேறு விதமாக மாறிவிடக் கூடும். பெருஞ் சங்கடத்திற்கிடமாகும். ஆகவே என்னை ஆசீர்வதித்து விடையளியும்.

கு. மைந்தா! நான் உன்னை விட்டுப் பிரியுமுன் கடைசி முறை உன்னைத் தழுவி உச்சி முகந்து செல்கிறேன்.

க. தாயே! தங்கள் மைந்தன் தங்கள் ஆசீர்வாதத்தைப் பெறும் பாக்யத்தையும் மறுப்பனோ! பாக்யர்.

(தாளிட்டு வணங்குகிருன். குந்தி அவனை ஆசீர்வதித்து எடுத்துத் தழுவி உச்சி முகர்கிருள்)

[மௌனக்காக்ஷி]

[திரை விழுகிறது]

அங்கம் 3 - களம் 4

பாண்டவர் பாசறை

[அர்ஜுனனும் கிருஷ்ணனும்]

கிருஷ். அர்ஜுனா! யுத்தமும் மும்முரமாய் நடக்கிறது. இப்பொழுது போய் நீ துக்கத்திற்கும் பந்தபாசங்களுக்கும் இடங்கொடுத்து வருந்தலாமா?

ஸோஹினி—ஆதி

அர்ஜு. என்ன மோசம் இதோ விளைத்தேன்
எனது குரு மடிய
முன்னோர் உடன்பிறந்தோர் மாளவும் மேன்மேல்
மண்ணையடைய மிக ஆவலாய் வீணிலே
(என்ன

ஏனும் புகழதழி வெய்தவும் என்னை
சால உலகம் பழிகூறவும் ஆளாகி (என்ன)

அபகீர்த்தி! எனக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்த குரு நாதனை நானே யுத்தமுனையில் எதிர்த்தேன். புத்ர சோகமும் உண்டாக்கி அவரைக் கொல்லவுங் காரணமானேன். இதைவிட அபகீர்த்தி பிறிதென்ன வேண்டும் எனக்கு? இனி நான் யுத்தஞ்செய்ய மாட்டேன். என்னுடன் பிறந்த பந்துக்களையும் எனக்குப் போதித்த ஆசிரியரையும் என்னைத் தூக்கி வளர்த்த பெரியோர்களையும் அற்பராஜ்யத்திற் காசைப் பட்டுக் கொல்லத்துணிந்தேன்! போதும் செய்தபாபம்!

கி. அர்ஜுனா! நீயா துரோணர் மரணத்திற்குக் காரணம்? ஆதியிலேயே யுத்தாரம்பத்தில் நான் உனக்கு விளக்கிக் கூறவில்லையா "நான்" என்ற அஹங்காரத்தை மறந்துவிடு என்று?

அ. ரிஷீகேசா! ஞானம் எவ்வளவுதான் ஸ்திரமாயிருந்த போதிலும் மனத்தின் சின்னஞ்சிறிய சலனத்தினாலும் அந்தத்திடம் சிதறுண்டு போய்விடுகிறதே.

[பீமன் பிரவேசம்]

பீ. மாதவா! சங்கதி தெரியுமா? கௌரவர் பக்கம் கர்ணன் சேனாதிபதியாகி விட்டானாம். படைவீரர் யாவரும் ஒரே ஆரவாரம் செய்கிறார்கள். இனிமேல் நம் கை வேகத்தை முழுத்திறத்துடன் நிர்த்தாக்ஷண்யமாய்க் காட்டவேண்டியதுதான். அர்ஜுனா! ஏன் முகவாட்டத்துடனிருக்கிறாய்?

கி. ஆசார்யர் மரணத்திற்காக.

பீ. தம்பீ! வருத்தத்திற்கு இதுவோ சமயம்? பாஞ்சாலி துகிலை அப்பாதகன் உரிந்தகாலையில் செய்த பிரதிக்ஞையை மறந்தாயோ?

அ. மறக்கவில்லை. என் முத்தண்ணாவுக்கு வந்த அபகீர்த்தி, பாஞ்சாலிக்குநேர்ந்த அவமானம் இவையெல்லாம் என் உள்ளத்தின் ஒவ்வொரு அணுவிலும் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப்போல் மூண்டுதான் எரிகிறது. ஆயினும் அண்ணா! குருவைக் கொன்ற துக்கம் தீரவில்லையே!

பீ. தம்பீ! யுத்தம் முடிந்த பின்னர், இறந்த குருவிற்கும் பாட்டனாருக்கும் சகோதர கௌரவர்களுக்கும் வருந்தி அழுவதற்கு அவகாசம் ஏற்படும். இப்பொழுது வீரத்தைத் துக்கத்தால் மழுங்கச்செய்யாதே! கொள் உத்ஸாஹம்.

கி. பீமா! நன்றாய்ச் சொன்னாய்! அபிமன்யு கொல்லுண்ட பழிக்குப்பழி இன்னமும் வாங்கப் படவில்லை அல்லவா?

அ. ஆம், ஆம்! அபிமன்யு! அபிமன்யு! என் அருமைக் கண்மணியை எழுபேர்களாக வளைத்துக் கொண்டு வஞ்சகத்தினால் கொன்றார்களல்லவா? யதுபதீ! ஜயத்ரதன் யமனுக்கு விருந்தாகிவிட்டான். இந்தக் கர்ணனை நாளை யுத்தத்தில் கொன்று பழி தீர்த்துக் கொள்ளாதுபோவேனாகில் நான் அர்ஜுனனல்ல. என் கையிலிருப்பது காண்டீபமல்ல.

பீ. அர்ஜுனா, எழுந்திரு! சூது மண்டபத்தில் செய்த சபதத்தை முடிக்குந்தினம் கிட்டி விட்டது! உன்னையும், நமது திரௌபதியையும் சபை நடுவே கொடியவசைச் சொற்களால் ஏசிப்பேசி ஆனந்தித்துக் கௌரவர்க்கு

உதவி புரிந்துவரும் அந்தச் சூதபுத்ரன் உயிருடன் இருக்கையிலுமா நீ இப்படிக் கெல்லாம் சிந்திப்பது? புறப்படு யுத்தத்திற்கு.

அ. வாஸ்தவமே கூறினீர்! இதோ யுத்தஸன்னத்தனுகி இன்றைய யுத்தத்திலேயே என் ஜென்மவைரியாம் அந்தக்கர்ணனை—மிருகங்கள் போன்ற துர்யோதன துச்சாதனரது கொடிய அக்ரமச்செய்கைகளைக் கண்டு ஆனந்தித்த அந்தக் கர்ணனை—ஒழித்தே மறுகாரியம் பார்ப்பேன். வாரும் போவோம்.

கி. அதுவே ஸரியான வார்த்தை! புறப்படு உத்ஸாஹத்துடன்! இந்த அபாரயுத்தத்தில் விஜய ஸ்ரீயின் சுயம்வரத்திற்காகத் தத்தம் பராக்ரமத்தைக் காண்பிக்கும் ரணசூரர்களின் ஹ்ருதயம் வீராவேசத்தால் தூண்டப்படுமாக!

பீ. அ. பாக்யம்!

(கிருஷ்ணனை வணங்கி செல்லுகின்றனர்.)

அங்கம் 3 - களம் 5

கர்ணன் பாசறை

[சிந்தித்தவண்ணம்]

கர். (தனிமை) தௌர்ப்பாக்யன்! மகா தௌர்ப்பாக்யன்! மித்ரபாசத்தால் கட்டுண்டு துர்யோதனன் பக்கம் யுத்தம் புரிய வேண்டிவந்ததே!..........அர்ஜுனா! நாம் இருவரும் அண்ணன் தம்பிகளாக ஓர் பக்கம் நிற்போமாகில் நமது வீர தீரம் வெளியாக வழியிராதென்றே தெய்வம் நம்மை எதிரிகளாக்கியதோ? ஐயோ! திரௌபதியைச் சூது மண்டபத்தில் பரிகசித்துப் பேசிய பாபம் தீரும் வகையுண்டோ! தர்மா! ஸத்ய தேவதே! உன்னை யெதிர்த்து எப்படியடா நிற்பேன்—மன்னிப்பாய். என் மனமுங் கலங்கிக்கிடக்கிறது. ஹே, கிருஷ்ணா! இவ்வளவுக்கும் ஆதிகாரணம் நீ தான்!

சாமா—ரூபகம்

க. மாதவனே என்னையும் நீ மனங்கொடு காத்திடுவாயே

சோதனையோ செய்திடுவாய் சோருமென்றன் உள்ளமையோ
(மா)

சுத்து கடல் வாழ்புயலால் கலங்கு கப்பல் போலானேன்
சித்தம் தடுமாறுதந்தோ செய்வதும் நானறியேன்
போரினில் நான் எதிர்த்திடினும் போற்று வேனுன் திருவடி-
யை (மா)

உன்னை நான் யுத்தகளத்தில் எதிர்த்து நிற்பினும், ஸதா ஸ்மரித்துக் கொண்டே யிருக்கிறேனே. பாண்டவர் பக்கமே பரிந்து நிற்கும் நீ ஒருமுறையாவது அவர்கள் அண்ணனும் என்னை அபிமானித்து ஆசீர்வதித்து அருள மாட்டாயா?

(சேவகன் பிரவேசம்)

சே. ஓர் பிராமணர், பிரபோ.

க. வரச்சொல்

(சேவகன் போக விருத்தப் பிராமண கோலத்துடன் கிருஷ்ணன் பிரவேசம்.)

கர்ணன். விருத்தப் பிராமணரே! வாரும். உமது வரவு நல்வரவாகுக. யாது வேண்டும் உமக்கு?

கிருஷ். அப்பா, கர்ணா! உன்னை அஸ்தினாபுரி ஸிம்ஹாஸனத்தில் அமர்த்திக் காணவேண்டு மென்பதே என் ஆசை. நீ ஏன் உன் சகோதரர்களாம் பாண்டவர்களுடன் சேரக் கூடாது?

கர்ணன். ஹா! ஈசா! தாயே, எவரிடமும் என் பிறப்பின் ரஹஸ்யத்தைக் கூறுவதில்லையென, எனக்களித்த வாக்கை மீறிப் பிறரறியப் பஹிரங்கப் படுத்தி விட்டீர்களே! தர்மன் அறிந்தால் யுத்தத்தை நிறுத்தி விடுவானே! அர்ஜுனனும் வில்லை விட்டெறிந்து வாளாவிருப்பனே! ஐயோ! மித்ரத் துரோகியும் எஜமானத்துரோகியும் ஆக்கி விட்

டீர்களே! பிராமணோத்தமரே! என் பிறப்பின் ரஹஸ்யத்தை உமக்குக் கூறியது யார்?
(கிருஷ்ணன் போர்வையை எடுத்து விட்டு ஸ்வய ரூபத்துடன் தோன்றுகிறார்.)
ஹா கிருஷ்ணா! (நமஸ்கரிக்கிறான்.)

கிருஷ். (எடுத்து) கர்ணா! நீ அதிரதன் மைந்தனல்லவென அறிந்த பின்னருமா, உன் தம்பிமார்களுக்குப் பலவித அநீத வழிகளால் துன்பமும் கஷ்டமும் உண்டாக்கிய துர்யோதனனை உன் நண்பனெனக் கருதுகின்றனை?

கர்ணன். கிருஷ்ணா! புண்பட்ட என் மனத்தில் கோலிட்டுப் பரீக்ஷியாதே. நான் ஒருகாலும் நம்பிக்கைத்ரோகம் செய்யேன். நீ அறியாத நீதியுமுளதோ?

கிருஷ். கர்ணா! இந்த யுத்தத்தில் பாண்டவர் ஜயமடைவது திண்ணம்.

கர்ணன். நீ சேர்ந்திருக்கும் கக்ஷிக்கோ அபஜெயம்? கிருஷ்ணா! இந்த யுத்தம் ஓர்பெரிய க்ஷத்திரிய குலயாகம். நீயே அதன் அக்னி ஹோத்திரி. கௌரவர்களும் அவரது நண்பர்களும் ஹவிஸ். நான் அறியாததல்ல. ஆயினும், நான் எனது எஜமான ஸேவையைச் செய்தே முடிப்பேன். செய்த சபதத்தினின்றுஞ் சிறிதும் மாறாதிருக்குமாறு ஆசீர்வதிப்பாயாக.

கிருஷ். கர்ணா! உன் மனோதிடத்தைக் கண்டு மெச்சினேன்! வேண்டும் வரத்தைக் கேள்.

கர்ணன். இந்த ஜனமம் போதும். இனியேனும் ஜன்மமேதும் இல்லாதிருக்குமாறு அருள்புரிவாய்.

கிருஷ். கர்ணா அது எப்படி முடியும்?..................நீ செய்த தான தர்மங்களின் காரணமாய்ப் பெற்ற புண்ய பலன்களை, நீயே மறுபிறப்பில் அனுபவிக்க வேண்டாமா? "தர்மம் தலைகாக்கும்" என்ற வசனம் கேட்டதில்லையா நீ?

கர்ணன். அது வேறு தொல்லையா?........கிருஷ்ணா! இதோ, இதோ! இக்கணமே நான் சம்பாதித்திருக்கும் புண்ய பலன் அனைத்தையும் உனக்குத் தத்தஞ்செய்து விடுகிறேன். தடை கூறாது பெற்றுக்கொண்டு என்னை உத்தரிக்க வேண்

டும். வேறு ஜன்மம் வேண்டாம் எனக்கு! அருள்வாய், அருள்வாய்!

கிருஷ். (கர்ணனைத் தழுவி) கர்ண! நீயே சுயநலங் கருதாக் கொடையாளி! உத்தம வீரன்! உன் கோரிக்கைப் படியே நீ எனக்குக் கொடுப்பதாக வாக்களித்த தான தர்ம விரத பலன்களைச் சமயம் வரும் பொழுது நான் பெற்றுக் கொள்கிறேன். அதைக்குறித்துக் கவலைப்படவேண்டாம். இனி நாழிகை யாகிறது, நான் போய் வரவா?

கர்ணன். என்னை ஓர் பொருட்டாயெண்ணி நாடி வந்து உத்தரித் தருளியதே என் பாக்யம்!
(வணங்கக் கிருஷ்ணன் விடை பெற்றுச் செல்லுகிறார்)

அங்கம் 3 - களம் 6

யுத்த களம்

[கிருஷ்ணன் ஸாரத்யம் செய்ய, அர்ஜுனன் ரதாரூடனாய் ஓர்புறமும், சல்லியன் ஸாரத்யம் செய்யக் கர்ணன் ரதாரூடனாய் மறுபுறமுமாக யுத்தம் செய்தவண்ணம்]

ச. கர்ண! கைசளையாதே! அர்ஜுனன் சரமாரி பொழிவதைப்பார்!

க. சல்லியராஜனே! இன்று சூர்யாஸ்தமனத்திற்குள் அந்த அர்ஜுனன் சிரத்தை என் சரணத்திடைச் சேரும்படிச் செய்கிறேன் பாரும்!

கி. அர்ஜுனா! கேட்டனையா கர்ணன் சபதத்தை?

அ. சூதபுத்ரன் சபதம் நிறைவேறுகிறதோ, பாண்டுபுத்ரன் சபதம் நிறைவேறுகிறதோ பார்ப்போம்.........இதோ விடுத்தேன் பிரம்ஹாஸ்திரத்தை!

ச. கர்ணராஜனே! பிரம்ஹாஸ்திரம் விடுத்தான் அவன்.

க. நானும் விடுத்தேன் பிரம்ஹாஸ்திரம்.

ச. கர்ணா! உன் அஸ்திரம் எதிரியின் சேனைகளைச் சேதமாக்குகிறதேயொழிய, அர்ஜுனனுக்கு எவ்வித ஹானியும் செய்வதாயில்லையே.

அ. கர்ணா! வில்வித்தையிற் சிறந்தவனெனக் கர்வங்கொண்டிருக்கும் உன்சிரத்தை என்சரம் அறுக்கும் வித்தையைக் காண என் ஆசிரியர் இல்லையே என்றுதான் வருந்துகிறேன்.

க. அர்ஜுனா! எவனொருவனை இணையிலாச் சிரேஷ்டனென வீணில் புகழ்ந்து வந்தனரோ, அவன் சிரத்தை என் சரங்கள் சரசரவென அறுத்தெறியுங் காக்ஷியைக் கண்டு திடுக்கிட, அந்தத் துரோணர் இல்லையே என்றுதான் நானும் வருந்துகிறேன்.

கி. அர்ஜுனா! சலியாதே. பொழி சரமாரி, வெற்றி உன்னுடையதே.

ச. கர்ணராஜனே! ஸாரத்யஞ் செய்வதில் சல்லியன் கிருஷ்ணனுக்கு இளைத்தவனல்ல. நிர்ப்பயமாக அர்ஜுனனை மண்மீது வீழ்த்துவதில் கருத்துடன் அஸ்திரமெய்வாய்.

க. ஹா! ஹா! எல்லா அஸ்திரங்களையும் பிரதி அஸ்திரங்களால் தூள்படச் செய்து விட்டான்.........இதோ! குறிதப்பா இவ் வாஸவாஸ்திரத்தை விடுகிறேன் நான்!

ச. குறி எங்கே வைக்கிறாய்?

க. கழுத்துக்குத்தான்.

ச. கர்ணா! அனுபவம் மிக்க என் வார்த்தையைச் சற்றுக் கேள். பார்த்தனுக்குச் ஸாரத்யஞ் செய்யும் மாயா வஞ்சகன் ஏதாவது சூழ்ச்சி செய்து இப்பாணத்தைப் பிரயோசனமற்றதாக்கப் பார்ப்பான்.

க. ஆகவே விடாதிருப்பதோ?

ச. குறியை அர்ஜுனன் மார்பு நோக்கி வை. அது தவறினால் கழுத்தில் பாயட்டும். அதுவுந்தவறினால் சிரத்தில் படட்டும்.

க. என்ன? கர்ணன் குறியுமா தப்பும்?

(வாஸவாஸ்திரத்தை விடுகிறான்)

கி. அர்ஜுனா! கலவரப்படாதே! தலையைக்குனி.

அ. கண்ணா! ரதம் ஏன் புதைகிறதே?.........ஹா, என் கிரீடம் போய்விட்டதே.

கி. தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று. இந்தா என் கிரீடம்.

(கிரீடத்தைக் கொடுக்கிறார்)

ச. கர்ணா! பார்த்தனையா என் பேச்சைக்கேளாததின் பலனை? வாஸவாஸ்திரம் திருப்பவும் உன் தூணியில் சேர்ந்து விட்டது. இம்முறையாவது அதை அவன் மார்பை நோக்கி விடு.

க. ஓர் முறை எய்து குறி தப்பிய அஸ்திரத்தைத் திருப்பவும் எய்வது தனுர்சாஸ்த்திர முறையோ? க்ஷத்ரிய வீரமோ? தவிர, அப்படிச் செய்வதில்லையென வாக்கும் அளித்திருக்கிறேன்.

ச. யாருக்கு?

க. பின்னால் உமக்கே தெரியவரும்.

ச. ஆயின் உன் அழிவை நீயே தேடிக்கொள்கிறாய்............ ஐயோ! இதென்ன விபரீதம்! தேர்ச்சக்கிரங்கள் மண்ணில் புதைந்து விட்டனவே!

க. சாப பலிதகாலம் கிட்டியதோ!

ச. சாபமும்! சபதமும்!.......கர்ணா! என் வார்த்தையைக் கேளாத உனக்கு ஸாரத்யம் செய்வதில் எனக்கும் கௌரவ மில்லை, உனக்கும் பிரயோசனமில்லை. எக்கேடாவது கெட்டுப்போ. உன் பழைய ஸாரதியை அனுப்புகிறேன்.

(ரதத்திலிருந்தும் குதித்துச் செல்கிறான்)

க. (தனக்குள்) என் முடிவு கிட்டியதே போலும்! (வெளிப்படையாய்) அர்ஜுனா! தர்மத்திற்கும் நியாயத்

திற்கும் அஞ்சிச் சிறிது நேரம் பொறுப்பாய், நான் என் ரதத்தைப் புதைந்து கிடக்கும் மண்ணினின்றும் வெளியெடுக்கும் வரை.

(கீழிறங்கி ரதத்தை மெதுவாய் வெளிக்கிளப்பமுயல்கிறான்)

அ. இப்பொழுது நீ யாசிக்கும் தர்மமும் நியாயமும், பாஞ்சாலியை அந்தத் துச்சாதன மிருகமும் துர்யோதனப் பேயுமாக, ஸத்யத்திற்குக் கட்டுப்பட்டிருந்த எங்கள் முன்னர் அவமானத்திற்குள்ளாக்கிய காலத்து, உன்ஞாபகத்தை விட்டகன்றனவோ? அச்சமயம் எங்களையும் அப்பெண் மணியையும் ஏசிப்பேசி மகிழ்ந்தனையே, அது தர்மத்திற்கும் நியாயத்திற்கும் ஒப்பிய செய்கையோ?

கி. அர்ஜுனா! உன் சபதத்தை நிறைவேற்ற இதுதான் சுமயம். பொய்க்குப் பொய், அதர்மத்திற்கு அதர்மம், கொலைக்குக் கொலை, அதர்மமாகாது. விடு அஸ்திரத்தைக் குறிபார்த்து. சூர்யாஸ்தமன காலமும் கிட்டுகிறது.

க. ஹா! கை சோருகிறதே! குரு நாதன் உபதேசித்த மந்திரமும் ஞாபகத்திற்கு வரவில்லையே. ஐயோ! பிராமணர் சாபமும் பரசுராமர் சாபமும் பலித்து விட்டதோ? என் அந்திய காலம் கிட்டியதோ?

(அர்ஜுனன் ரதம் விட்டிறங்கிக் குறி வைக்கிறான்)

க. அர்ஜுனா! பொறு சுத்தவீரன் என்னும் பெயரை வீணாக்கிக் கொள்ளாதே.

கி. அர்ஜுனா! தயங்காதே விடு பாணத்தை. யோசனையின்றிக்கேள் என்வார்த்தைகளை........ஹா! அப்படிதான்!

அர்ஜு. கிருஷ்ணா! என்ன விந்தை இது! இவ்வளவு அஸ்திர சஸ்திரங்களில் ஒன்றேனும் கர்ணன் மீது படுவதாகக் காணோமே.

கி. அது ஓர் ரகஸ்யம்.......சற்றுப் பொறு, இதோ வருகிறேன்.

(ரதம் விட்டிறங்கிக் கர்ணனை நோக்கிச் செல்கிறார்)

க. ரதம், ரதம், எனக்கோர் ரதம் கொடுத்து உதவுவாரில்லையா?

கி. கர்ணு! அர்ஜுனனை வெல்வது இனி உன்னால் ஆகக்கூடிய காரியமல்ல என்பதை யறிந்தாயல்லவா?..........இனியேனும் அவனுடன் சமாதானம் செய்து கொள்.

க. என்ன, கிருஷ்ணு அப்படிக் கூறுவது? சுத்தவீரன் உயிரிழக்க நேரிடினும் களத்தில் முன் வைத்தகாலைப் பின் வாங்குவாஞ? அது கிடக்கட்டும். நற்சமயத்திலேயே ஞாபகம் வந்தது. கிருஷ்ணு! நான் உனக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்த என் தானதர்ம விரத பலன்களை இப்பொழுதாவது பெற்றுக்கொண்டு என்னை ஆசீர்வதித்து அருளலாகாதா?

கி. (புன்சிரிப்புடன்) அப்படிச் செய்துதான் ஆகவேண்டுமா? ஆயின் உன் இஷ்டம்.

க. கிருதார்த்தனுனேன்—இதோ (மார்பில் புதைந்திருக்கும் அம்பை எடுத்தெறிந்து) இதோ என் ஹ்ருதயத்தினின்றும் பெருகிவரும் உதிரத்தைக் கொண்டே தத்தம் செய்கிறேன் கிருஷ்ணர்ப்பணமஸ்து.

(தத்தம் செய்கிருன்)

கி. கர்ணு! பிறப்புப் பிணி யொழித்தாய் (அர்ஜுனனை நோக்கி) அர்ஜுனு! இனிதாமதியாதே. ஒரே பாணம் உன் வைரி இறந்தான்.

அ. கர்ணனிடம் நீ பெற்றதுயாது?

கி. பிறகு கூறுகிறேன். விடு பாணத்தை யோசியாதே—தாமதம் வேண்டாம்.

அ. அடே கர்ணு! மிருகத்தைப் போல் பிறர் அவமானத்தில் ஆநந்தம் கொண்ட உன்னை ஓர் மிருகத்தை அடித்து வீழ்த்துவதுபோல் அடித்து வீழ்த்துவதே நியாயம். கிருஷ்ணர்ப்பணமஸ்து!

(கர்ணன்மீது பாணம் எய்கிருன்)

க. (அம்புதைத்து மண்ணில் வீழ்ந்தவனாய்) ஹா விதியே வென்றது! ஹே பார்த்தஸாரதி! என் சபதம் வீணாயிற்று உன் பார்த்தனே வென்றான்!.........நான் உயிர்துறக்கிறேன்.........தாயே.........என்னை.........ஈன்றெடுத்த தாயே!

[இறக்கிறான்]

[கிருஷ்ணனும் அர்ஜுனனும் கர்ணனருகில் செல்கிறார்கள்]

கி. உலகெல்லாம் கொண்டாடும் உத்தம வீரன் மரித்தான். இவன் போன்ற ஓர் வீரன் இனிப் பிறப்பதரிது!

அ. நானும் பழிதீர்த்துக் கொண்டேன்.

(பீமன் பிரவேசம்)

பீ. அர்ஜுனா! என் சபதம் முடிந்தது! துச்சாதனமிருகத்தைக் கொன்று அவன் மார்பகத்தைக் கீண்டு சூடான அவன் ரத்தத்தைக் குடித்து மகிழ்ந்தேன். திரௌபதியும் அவ்வுதிரத்தால் கூந்தலை வாரித் தன் சபதத்தை முடித்துக் கொண்டனள்! ஹா! கர்ணனும் ஒழிந்தானா? பழிக்குப்பழி முற்றிலுந் தீர்த்துக் கொண்டோம்.

அ. கௌரவர் குலமே அழிந்தது.

(குந்தி தலைவிரிகோலமாய் ஓடோடியும் வந்து கர்ணன் மீது விழுந்து புலம்புகிறாள்)

நபகம்

குந்தி. அப்பா மகனே யாரிட்ட சாபமோ அறியேன் சுதனே
ஒப்பாருமில்லா நீ இப்பாழுங்கதிக்கு
தப்பாமல் வந்தது—எப்பாதகமோ (அ)

பெற்ற தாயென்று உற்றொருவார்த்தை
சற்றும் சொல்லாதது கற்ற உன் நீதியோ
சேயென்றுனைப் பெற்ற தாயழுகிறுளென
வாய்திறந்தொரு வார்த்தை கூறாயோ மகனே
துங்கமுகனே உன் தங்கமேனியை
பங்கமாய்ப் பார்க்க அங்கம் பதறுதே. (அ)

ஐயோ மகனே! இக்கோலத்திலேயா உன்னை உலகோரறியக் கட்டித்தழுவி 'மகனே' யென அழைக்க வேண்டி

யதாயிற்று! இப்புத்ரசோகத்தை எப்படியடா சகிப்பேன் 'இன்று யுத்தத்தில் நானாவது இறக்கவேண்டும், தம்பி அர்ஜுனனாவது இறக்கவேண்டும், இதர நான்கு தம்பி களையும் கொல்வதில்லை' நீ என்றும் பஞ்சபாண்டவர் களுக்கே தாயாய் இரு என்று எனக்கு உறுதி மொழி கூறினையே. அப்படியே நிறைவேற்றி என்னைப் பரித விக்கவிட்டு நீ மறு ஜன்மமில்லா மோக்ஷத்தை அடைந் தனையே.

அ. (திகைத்து) அம்மா, என்ன இது? கர்ணன் தங்கள் குமாரனா?

[யுதிஷ்டிரர், நகுலர், சகாதேவர் பிரவேசம்]

கு. ஆமாமடா, நீ வைரத்துடன் கொன்ற இந்த கர்ணன் உன் மூத்த தமையனடா என் முதல் மைந்தனடா.

யு. ஹா! தாயே! கர்ணன் எனக்கு மூத்தவனா? ஐயையோ! பழிகாரன் ஆனேனே. பாதகனானேனே!

நகு. சக. மஹாபாதகர்களானோமே!

அ. அம்மா! இதை ஏன் முன்னமேயே எங்களுக்குத் தெரி விக்கவில்லை?

கு. அது ஒரு பரம ரகஸ்யமப்பா! எனக்கும், கண்ணனுக் கும் இறந்த இக்கர்ணனுக்கும் தவிர வேறெவரும் அறி யாத ரகஸ்யமப்பா.

அர்ஜு. கிருஷ்ணா! அந்த ரகஸ்யத்தை எங்களுக்கு ஏன் கூற வில்லை நீ?

கிருஷ். அர்ஜுனா! ரகஸ்யம் என்றும் ரகஸ்யமே. ரகஸ்யம் என்று கூறிய பின் அதைக்கூறும் படி நீ கேட்கலாமா?

அர்ஜு. எனினும், கர்ணன் என் அண்ணன் என்பதையாவது கூறியிருக்கக் கூடாதா? அண்ணனைக் கொல்ல என்னை ஏவி வேடிக்கை பார்த்தனையே, தர்மமா?

கிருஷ். அர்ஜுனா! நீயா கர்ணனைக் கொன்றதாக எண்ணுகிறாய்? கர்ணனை உன்னால் தான் கொன்றிருக்க முடியுமா? அவ னுடைய விதி, பரசுராமர் சாபம், பிராமண சாபம், இந்

திரன் செய்த யாசகம், இவையனைத்தும் உன்னை ஓர் கருவியாகக் கொண்டு கர்ணன் உயிரைக் கவர்ந்தன வென்று அறிவாய். தர்மம் தலை காக்கும் என்பது இந்தக் கர்ணனிடத்திலேயே பிரத்யக்ஷமாகியதைக் கண்டாய் நீ. அவன் செய்த தான தர்ம விரதபலன் காரணமாகத் தர்ம தேவதை உன் கணைகள் அவ்வளவையும் அவனை அணுகவொட்டாது தடுத்துக் காத்து வந்தது. கடைசியில் களத்தில் சற்று முன்னர் அவனுகர்தன் தான தர்ம விரத பலன்களை எனக்குத் தானம் அளித்த பிறகு தான் அவனுயிரை உடலினின்றும் நீக்க உன் பாணத்தால் ஆகியது! உண்மை அறிந்தனையா இப்பொழுது?

அர்ஜு. அண்ணா! என்னை மன்னியும்!

விருத்தம்—சாவேரி

ஊன் தொடுத்த வயவாளி எத்தனையாயிரந் தொடுத்தேன் உரகத்தால் நீ, தான் தொடுத்த கடுங்கணைக்குத் தப்பினேன், என மகிழ்ந்தேன் சஞ்சரீகம், தேன்தொடுத்த மலரங்கள் தினநாதன், சேயேநின் திருமார்பத்தில், யான் தொடுத்த நெடும்பகழி எனைக் கெடுப்பதறிந்திலேன் என்செய்தேனே.

உண்மையை அறியாது உம்மை ஏசிப்பேசி விரோதியெனப் பகைத்து வசைச்சொல் கூறிக் கொன்றேனே! என் அருமைத் தமையனையே சூத புத்திரன் எனப் பரிகசித்தேனே! பாண்டவ குல ரத்னத்தை இழிகுலத்தவனென ஏளனஞ் செய்தேனே!

ஸிந்து பைரவி—திருபுடை

கோது யாதுமிலாத ஐயனைக் கோது செய்திட்டேனந்தோ
மாதா சாலவும் வாடி வருந்திட வாதை செய்தேனே ||
சூது யாதுமிலாத நெஞ்சனை சூதன் மகனென இகழ்ந்திட்டேனே
தீதில் கொடையுடை தினகரன் சுதனைத் தீர்ந்திட்டேனே ||

அண்ணா! நீ உயிருடன் இருக்கும் பொழுது உமக்கு ஊழியஞ்செய்து உமது காரியங்களை நிறைவேற்றி வைக்கக் கொடுத்து வைக்கவில்லை. இப்போது நீர் இறந்துவிட்டீராயினும், உயிருடனிருக்குங்கால் கடைசியாக உம் மனத்துள் அறியவிருந்த உமது கோரிக்கையை

இதோ நான் ஈடேற்றி வைக்கிறேன். அர்ஜுனன் சிரத்தைச் சூரியாஸ்தமனத்துக்குள் உமது சரணத்திடைச் சேர்ப்பிப்பதாக வன்றோ பிரதிக்ஞை செய்து கொண்டு இன்று யுத்த களம் பிரவேசித்தீர்...........இதோ சூரியாஸ்தமனம்! இதோ என் சிரத்தை உமது சரணங்களிடைச் சேர்ப்பித்தேன்!

(கர்ணன் பாதத்திடைத் தன் சிரத்தை வைத்து நமஸ்கரிக்கிறான். யாவரும் வணங்கி மரியாதை செய்கிறார்கள்)

(துர்யோதனன் பிரவேசம்)

துர்யோ. ஹா! ஹா! கர்ணா! என் இன்னுயிர்த்தோழா! நீயும் இறந்தனையோ!

(கர்ணன் மீது விழுந்து புலம்புகிறான். குந்தியைக் கண்டு திடுக்கிட்டு.)

ஹா! என்ன இது? என் சிற்றன்னையார் என் கர்ணனைத் தழுவி வருந்துகிறார்கள்?

யுதிஷ். கர்ணன் என் தாயின் மூத்த மைந்தன். எனக்கு மூத்தோன்.........சூர்ய புத்ரன். இந்த ரகஸ்யத்தை இப்பொழுதே தான் அறிந்தோம்.

துர்யோ. சூர்ய புத்ரனா? சூத புத்ரனல்லவா? கர்ணன் அறிவானா இவ்விரகஸ்யத்தை?

குந்தி. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே அறிவானே. அறிந்தும், எஜமானத் துரோகமாகாதென்று உங்கள் பக்கம் நின்று உயிர்துறந்தான்.

துர்யோ. ஹா! கர்ணா! என்னென்று புகழ்வேன் உன் எஜமான பக்தியை! நீயும் இறந்த பின்னர் இனி நான் எப்படி உயிர் வாழ்வேன்?

விருத்தம்—கேதார கௌளம்

அனையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக்
கரையேறலான கோலப்
புணையாய் எத்திறங்களினும் பகிராமல்
உற்றதெல்லாம் புகலத் தக்க
துணையாய் என்னுயிர்க்குயிராம் தோழனுமாகிய
உன்னைத் தோற்றேனாகில்
இணையாருமிலாவரசே யாரைக்கொண்டு
அரசாள இருக்கின்றேனே.

[கர்ணனைத் தழுவிப் புலம்புகிறான். கர்ணன் கபாலத்தினின்றும் ஓர் ஜோதி கிளம்பி சூர்யமண்டலம் நோக்கிச் செல்கிறது. அந்தரத்தில் கிருஷ்ணன் சங்கு சக்ர தாரியாய்ப் பாண்டவர்க்குக் காக்ஷி கொடுக்க யாவரும் அவரைத் துதித்து ஸ்தோத்தரிக்கின்றனர்.]

திரை விழுகிறது

முடிவு.